Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 சுக்கில ஹூ சித்திரை மீ 31 ஆம் உ வெள்ளிக்கிழமை (13 - 04 - 1990) ஹிஜ்ரி 1410 றம்ழான் 16 ஓசை 54

## இந்திய - பாகிஸ்தான் எல்லையில் படைகுவிப்பு; பரஸ்பர குற்றச்சாட்டு!

(இஸ்லாமாபாத்)

இந்தியாவும், பாகிஸ்தானும் தமது எல்லைகளில் படைகளைக குவித்து வருவதுடன் பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களையும் வீசி வருகின்றன. இரு நாடுகளும் நடந்து கொள்ளும் முறை தொடர்பாக உபகண்டத்தில் மூன்றாவது போர் ஒன்றை தொடங்கிவிடக் கூடும் என மேற்குலக இராஜதந்திரிகள் கருதுகின்றார்கள்.

பாகிஸ்தானின் சிந்து மாகாண எல்லையில் இந்திய இராணுவத்தைக் குவித்து வரும் அதேவேளை இந்தியாவும் சிந்து மாகாண எல்லையில் பாகிஸ்தான் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளதோடு, தாங்கள் ஒரு காவற்சாவடிகளைக் கூட அதிகரிக்கவில்லை என மறுத்துள்ளது.

காஷ்மீரில் முஸ்லிம் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் வி. பி. சிங் பாகிஸ்தா (6ஆம் பக்கம் பார்க்க)



# முதல் தடவையாக இலங்கை அமைச்சர் - பிரபா சந்திப்பு



### ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புப் பணம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்கு ஆறுமாத காலமாக வழங்கப்படாதிருந்த கஷ்டகால ஊக்குவிப்பு பணத்தின் இரண்டு மாத கொடுப்பனவை அடுத்த மே ஜூன் மாதங்களில் ஒவ்வன்றாக வழங்கப்பட உள்ளது என வடகிழக்கு மாகாண கல்வி கலாச்சார விளையாட்டு துறை அமைச்சு செயலாளர் ஈ. ஜே. சற்குணராஜா தெரித்தார். (லோ)

## புலிகள் பாதுகாப்பில் வரும் ஹமீத் வட-கிழக்குபாதுகாப்பு;அத்துமீறல்ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை இலங்கையில் ஆட்சிபீடத்திலுள்ள ஓர் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான ஜனாப் ஏ ஸி. எஸ். ஹமீது இன்று முற்பகல் யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாகச் சந்திக்கும்போது வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிலதினங்களுக்குமுன் இலங்கைப் பொலிசார் நடாத்திய அத்துமீறிய செயல்பற்றி தலைவர் கடுமையான ஆட்சேபம் தெரிவிப்பாரென அறியப்படுகிறது.

இன்று முற்பகல் ஒன்பது மணிக்கு பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கும் நீதி அமைச்சரும் வடக்கு கிழக்கு சமாதான சபைத்தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் விடுதலைப் புலிகளின் பாதுகாப்புடன்யாழ் நகருக்கு அழைத்து வரப்படுவார்.

யாழ். நகரில் அமைச்சர் ஹமீத் தலைவர் பிரபாகரனை முற்பகல் பத்து மணிக்குச் சந்திப்பார். தலைவருடன் பிரதித் தலைவரும் மக்கள் முன்னணித் தலைவருமான கோ. மகேந்திரராசா, செயலாளர் யோகரத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் யாழ். மாவட்ட பொறுப்பாளர் பானு (6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் 25 பேருக்கு 12 1/2 இலட்சம் நஷ்டஈடு

(கிளிநொச்சி)

இராணுவ நடவடிக்கைகளினால் கணவன்மாரை இழந்த 25 விதவைகளுக்கு தலா 50 ஆயிரம ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த விதவைகளுக்கு இப்பணம் காசோலையாக கிளிநொச்சி கச்சேரியில் வைத்து அம்மாவட்டஅரசாங்கஅதிபர் திரு. க. மாணிக்கவாசகரினால் வழங்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட ஏனையோருக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கூடிய விரைவில் அவை வழங்கப்படும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார் (த

### நீர்கொழும்பு வீதியில் தமிழ்ப்பெண் மரணம்

(கொழும்பு)

நேற்று முற்பகல் நீர்கொழும்பு வீதியில் சென்று கொண்டிருந்த மினிவான் ஒன்று விபத்துக்குள்ளானதில் திருமதி ஜெயரத்தினம் என்னும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் மரணமானார் கோப்பாய், இருபாலையைச் சேர்ந்த மற்றொரு பெண் பலத்த காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வட - கிழக்கு மாகாணசபை எதிர்காலம் ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபையின் தற்போதைய நிலை பற்றிய அறிக்கையை ஜனாதிபதி பரிசீலனை செய்து வருகிறாரென்றும் இதன்பின் இம் மாகாணசபையின்எதிர்காலம் பற்றி அவர் முடிவு செய்வாரென்றும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## சப். இன்ஸ்பெக்டர் உட்பட 25 பொலிசார் காலிக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 25 பேர் அடங்கிய ஓர் பிரிவினர் (ஒரு பிளட்டூன்) காலிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் பருத்தித்துறையில் ... வித்திருந்ததோடு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களும் மூடப்பட்டதும் தெரிந்ததே.

பொலிஸாரின் இடமாற்றம் (6 ஆம் பக்கம் பார்க்க)

### நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச் சங்கத்

## இம்மாத முடிவுக்குள் மாகாணசபை கூடுமாம்!

### புத்தாண்டில் இலங்கை வங்கி சேவையாற்றும்

## உல்லாசப் பிரயாணிகளிடம் ரூபா 15 இலட்சம்கொள்ளை

நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரிய திராவிடபாஷாபிவிருத்திச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலாநிதி கு. சிவப்பிரகாசம் நினைவுப் பேருரை இம்மாதம் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பண்டிதர் க. சச்சிதானந்தன் உவம - வியலின் உளவியல் அடிப்படை என்ற பொருள்பற்றி உரையாற்றுவார்.

# இம்மாத முடிவுக்குள் மாகாணசபை கூடுமாம்!

## ஈ. பி. ஆர். எல். எவ். தீர்மானமாம்!

வடக்கு - கிழக்கு மாகாண சபைக் கூட்டத்தைத் திருக்கோணமலையில் இந்த மாத முடிவுக்குள் நடத்துவதென ஈ. பி ஆர். எல். எவ். முடிவு செய்துள்ளது, முன்னாள் முதலமைச்சர் பெருமாளும் கூட்டத்தில் கலந்து கொள்வாராம்.

73 பேரைக் கொண்ட மாகாண சபைக் கூட்டத்தைத் திருக்கோணமலையில் நடாத்துவதற்கு போதியபாதுகாப்பு ஒழுங்குகளை ஏற்படுத்தித் தரும்படி நேற்று முன்தினம் தான் வடக்கு-கிழக்கு மாகாணசபை ஆளுநரைக் கேட்டதாக மாகாணசபைப் போக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வங்கி சேவையாற்றும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகளும் நாளை மலரும் புத்தாண்டு தினத்தையொட்டி காலை 10-00 மணி முதல் 12-00 மணிவரை திறந்திருக்கும் இத்தினத்தில் வங்கி வாடிக்கையாளர்கள், ஆதர

(6ஆம் பக்கம் பார்க்க)

னர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் பருத்தித்துறையில் பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக விடுதலைப் புலிகள் கடும் ஆட்சேபம் தெரி

## ரூபா 15 இலட்சம்கொள்ளை

(அனுராதபுரம்)

இலங்கை வந்த உல்லாசப் பிரயாணிகள் கோஷ்டி ஒன்று ஹொரவப்பொத்தானையில் வைத்து கொள்ளையிடப்பட்டது.

பெரும்பாலும் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த இக் கோஷ்டியினரிடம் இருந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு மாகாண கல்வி கலாசார ஒருங்கிணைப்பு

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டு துறை அமைச்சின் செயலாளர் ஈ. ஜே. சற்குணராஜா யாழ். மாவட்டத்திற்கு தனது பதவி ஏற்பின் பின் முதன் முறையாக விஜயம் செய்துள்ளார் அவரை எமது ஈழநாதம் செய்தியாளர் சந்தித்தபோது யாழ். மாவட்ட கல்வித்துறை பற்றிய குறைபாடுகளையும் அதறகு செய்ய வேண்டிய

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு தலைமையின் கீழ் அனைத்து நிறுவனங்களும் வரவேண்டும்

\- ஆஞ்சனேயர்

(யாழ்ப்பாணம்)

எமது தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் ஓர் ஒரு மித்த சக்தியாக தமிழீழ மக்கள் ஒன்றுதிரள வேண்டுமாயின் அதற்கு முதற்படியாக அனைத்து நிறுவனங்களும் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்படடு அதன் மூலம் மக்களின் விடுதலையை அடைவது மிக சுலபமாகும் என்று நேற்று யாழ். பஸ் நிலையத்தில் நடைபெற்ற போக்குவரத்து தினவிழாவின் போது வலிகாமம் அரசியல் இணைப்பாளர் ஆஞ்சனேயர் தமது உரையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு பெருந்தொகையான மக்கள் சமுகமளித்திருந்தனர் வட பிராந்திய போக்கு வரத்து சபைத்தலைவர் திரு. கனகரட்ணம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் ஆஞ்சனேயர் மேலும் பேசுகையில் ஒரு போக்கு வரத்து நிறுவனம் மாணவர்களின் வளர்ச்சிக்கு பேருதவியாற்றுவதுகுறிப்பாக போற்றப்படக் கூடியது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் கிராமங்களுக்கும் நகர மக்களுக்கும் இடை

(6ஆம் பக்கம் பார்க்க)

# அரச ஊழியருக்கு வீடமைப்புக் கடன்

அரசாங்க ஊழியர் வீடுகளை அமைப்பதற்கு ஐந்து வருட சம்பள முற்பணம் வழங்க உள்நாட்டு, மாகாண சபைகள் பொது நிர்வாக அமைச்சுகள் ஆலோசித்து வருவதாக உத்தியோகபூர்வ வட்டாரங்கள் கொழும்பில் நேற்று முன்தினம் தெரிவித்தன

இப்போது நடைமுறையிலுள்ள பிரமாணங்களின் படி இரண்டு வருடச் சம்பளத்தை அரசாங்க ஊழியர் வீடுகட்ட முற்பணமாகப் பெறலாம்.

இரண்டு வருடச் சம்பளத்தை ஏற்கனவே முற்பணமாகப் பெற்றவர் புதிய திட்டம் நடைமுறைக்கு வந்ததும் எஞ்சியுள்ள மூன்று வருடங்களுக்கான சம்பள முற்பணத்தையும் பெறலாம்.

ஐந்து வருட முற்பணம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபர்கள் மகாநாடு

(கிளிநொச்சி)

அரசாங்க அதிபர்கள் மகாநாடு ஒன்று இம்மாதம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இது சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்று சகல அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# நள்ளிரவு பிறக்கும் பிரமோதூத சித்திரைப் புத்தாண்டு

பிரமோதூத என்ற பெயரைக்கொண்ட இப்புத்தாண்டு வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி இன்று பங்குனி 31உ வெள்ளிக்கிழமை பின்னிரவு 1 மணி 11 நிமிடத்திலும் திருக்கணிதத்தின்படி பின்னிரவு 3 மணி 56 நிமிடத்திலும் பிறப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்று இரவு 9 மணி 10 நிமிடம் முதல் சனிக்கிழமை அதிகாலை 5 மணி 10 நிமிடம் வரை விஷு புண்ணிய காலமாகும். இந்த புண்ணிய காலத்தில் மருத்துநீர் தேய்த்து நீராடுவது மரபாகும். புத்தாடை வெள்ளையாயினும் வெள்ளைக் கரையமைந்ததாயினும் நன்று. புத்தாண்டு பிறந்தவுடன் நாம் செய்யவேண்டிய சுப காரியங்களை சனிக்கிழமை காலை 9.21 முதல் 10.28 மணி வரையும் மேற்கொள்வது நன்று. கைவிஷேசம் வழங்குவதற்குரிய காலம் சனிக்கிழமை (14·4·90) காலை 6.11 மணிமுதல் 7.49 மணி வரையும் பொருத்தமாகும். திங்கட்கிழமை (16.4 90) காலை 9·56 முதல் 11.54 மணிவரையும் கைவிஷேசத்திற்கு உகந்த காலமாகும்.

தமிழர் புத்தாண்டு எமது வாழ்வில் நம்பிக்கையூட்டுவதாகுக.

# ஈ. பி. ஆர். எல். எவ்வின் நிபந்தனை பேச்சுக்குத் தடை!

## அமைச்சர் ரஞ்சன் விளக்கம்

(கொழும்பு)

''எந்தக் குழுவுடனோ, கட்சியுடனோ நிபந்தனையெதுவுமின்றிப் பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சனைகளுக்குச் சுமுகமான தீர்வுகாண்பதே அரசின் கொள்கை. இதன் அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்திவருகிறது. ஈ. பி. ஆர். எல். எவ். குழுவுடனும் பேச்சுவார்த்தை நடத்த அரசு தயாராக இருக்கிறது, ஆனால் அது பத்தொன்பது அம்சக்கோரிக்கை மீது தான் பேச்சு நடத்த வேண்டுமென்று நிபந்தனை விதிப்பது தான் பேச்சுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது''

இவ்வாறு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ரஞ்சன் விஜேரத்தினா நேற்று வாராந்தரப்பத்திரிகை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டுப் பணிப்பெண்களுக்கு புதிய சம்பளத்திட்டம்

(கொழும்பு)

வீட்டுப் பணிப்பெண்களாக பணிபுரிவோருக்கு புதிய சம்பளத்திட்டம் அமுலாக்கப்படவுள்ளது. இதற்கான திட்டம் ஒன்றை தொழில் அமைச்சு தயாரித்துவருகிறது.

இவர்களுக்கு ஒழுங்காகவும் சரியாகவும சம்பளம் கிடைப்பதில்லை என்று புகார்கள் வந்திருப்பதாகவும் அமைச்சு அதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## மினிபஸ் மோதி பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கேரதீவிலிருந்து பிரயாணிகளை ஏற்றிக் கொண்டுவந்த மினிபஸ் ஒன்று பிரதான வீதியில் யாழ். செயலகத்திற்கு அண்மையில் ஒரு பெண்ணின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

சீயாக்காய், பயறு, அரிசி, வெந்தயம் ஆகிய நான்கு வகைப் பொருட்கள் அடங்கிய சீயாக்காய் பவுடர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

M. G. M. NO. 777
K. K. S. ROAD, JAFFNA
(B/746.)

---

யாழ். மாநகரசபை எல்லைக்குள்ள இரண்டாம் குறுக்குத் தெருவில் வெறுங்காணியும், மூன்றாம் குறுக்குத் தெருவில் வீடும் வளவும் விற்பனைக்கு உள்ளது. தேவைப்படுவோர் கீழ்க்கண்ட ஸ்தாபனத்தில் தொடர்பு கொள்ளவும்.
லலிதா ஜுவல்லறி 213 கஸ்தூரியார்றோட்யாழ்ப்பாணம்
B/169

---

### மலிவு விலையில்

J.V.C. GXN 70 வீடியோ கமறா, National G.1. ஜென்லொக் வீடியோ கமறா, Sunsui Vision mixer, 14'' National Colour T.V. ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். எவர்விஷன் 21, மணிக்கூட்டுவீதி யாழ்ப்பாணம். B. 747

---

### தேவை

லண்டன் Pitman Typing, Shorthand யூலை 90 பரீட்சைக்குத்தோற்ற விரும்புபவர்கள் 14.04,90இற்கு முன்பு எம்மிடம் தொடர்பு கொள்ளவிம், Bond Institutes 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். B. 751

---

# பின்தங்கிய கிராமங்களை முன்னேற்ற சகல மக்களும் ஒத்துழைக்கவேண்டும்

## உதவி உள்ளூராட்சி ஆணையாளர் உரை

(சித்தங்கேணி)

வடக்கு கிழக்குப்பகுதிகளில் வாழும் ஒவ்வொரு தமிழ்மகனும் தமது தாயகத்தின் ஒவ்வொரு பிரதேசத்தினதும் அபிவிருத்தியைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். எல்லா மக்களுக்கும் தத்தமது கிராமங்களில் பிரச்சினைகளும் வசதியீனங்களும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இவர்களை விட மிகவும் அடிமட்டத் தேவைகள்கூட நிறைவேற்றப் படாத கிராமங்கள்கூட இருக்கின்றன.

அவர்களது பிரச்சினைகளுக்குமுன்னுரிமைகொடுத்து இத்தகைய பின்தங்கிய கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு எல்லா மக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் காரைநகர் வடக்கு உப அலுவலகத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா கூறினார்.

காரைநகர் வடக்கு உபஅலுவலகப் பொறுப்பதிகாரி திரு. எஸ். மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய உதவி ஆணையாளர்,

கடந்தவாரம் வடமராட்சிப் பகுதியிலுள்ளகுடத்தனை அம்பனை, நாகர் கோயில்,மருதங்கேணி போன்ற கிராமங்களுக்குச் சென்றிருந்தேன்.

இக்கிராமங்கள் பிரதான வீதியிலிருந்து இரண்டரை மூன்று மைல்களுக்கு அப்பால் துவிச்சக்கர வண்டிகளில் கூட செல்ல முடியாத மோசமான வீதிகளைக்கொண்டுள்ளன.

இங்கு வைத்தியசாலைகள் எதுவும் கிடையாது. அண்மையில் ஒரு கர்ப்பிணித் தாய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் இறந்துவிட்டார். இன்னொரு கர்ப்பிணித் தாய்க்கு கிணற்றடியில் பிரசவம் நடந்தது. இப்படியான கிராமங்களை அபிவிருத்த செய்வதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வடக்கு கிழக்கு பிரதேச அபிவிருத்திக்காக அரசாங்கம் சகல திணைக்களங்களுக்கும் பல கோடி ரூபாவை ஒதுக்க முன்வந்துள்ளது. இந்தப் பணத்தைப் பயன்படுத்தி எமது பிரதேசங்களை 1983க்கு முன்னர் இருந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கு சகல திணைக்களங்களைச் சேர்ந்தவர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

இருபத்தி ஓராம் நூற்றாண்டு மிகப்பயங்கரமான சூழலை எதிர்நோக்கியுள்ளது. எமது குடிநீர் பல்வேறு வழிகளிலும் மிக வேகமாக மாசுறுகிறது. பசளைப்பாவனை கிருமிநாசினி, களைக்கொல்லி என்பனவற்றின் பாவனை அதிகரித்துவருவதால் உணவுப் பொருட்கள் நஞ்சூட்டப்படுகின்றது. காலப்போக்கில் இது பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. ஏ. சி. இராஜதுரை, காரைநகர் வடக்கு அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. கே. நடராஜா உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ்.எஸ். சிவரெத்தினம் பிரதேசவிசேட ஆணையாளர் திரு.சி,இராகுலேந்திரன், திரு. எஸ். கனகநாயகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

திரு. ச. திருநாவுக்கரசு நன்றி நவின்றார். (23)

---

### நெசவாளர் தேவை

மின்தறி நெசவில் குறைந்தது 2 வருட அனுபவம் உள்ள நெசவாளர் உடன் தேவை நேரில் வரவும் யூனியன் பவலூம் 190ம்- கட்டையடி' நுணாவில் சாவகச்சேரி

---

### விற்பனைக்கு

கல்லு அரியும் யந்திரம் (மின்) Bricks Making Mechine விற்பனைக்கு உண்டு. மோட்டார் 3 அச்சுகள் உட்பட விஷேட பயிற்சி வழங்கப்படும் சகல விபரங்களுக்கும் ''அருள்ஸ்'' 107, டேவிற் வீறி யாழ்ப்பாணம். (பிரதான வீதியில் இருந்து 100 யார் தொலைவில்) (R. 175)

---

# துணுக்காயில் அன்னைக்கு விழா

எதிர்வரும் 15ஆம் திகதி அன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியை முன்னிட்டு துணுக்காயில் விழா நடைபெறவுள்ளது,

இவ்விழாவிற்கு திருமதி பு.நடராசா தலைமை தாங்குகின்றார். இதனைக் கலை கலாசாரப் பிரிவினரும், அன்னையர் முன்னணியும் இணைந்துநடாத்த உள்ளனர்.

காலையில் ஊர்வலமும், இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுமென முல்லை மாவட்ட கலை கலாசாரப் பொறுப்பாளர் சங்கர் அறிவித்துள்ளார்.

---

# மீராபாலிகா மாணவர்கள் குடிநீரின்றி அலைகிறார்கள்

(காத்தான்குடி)

காத்தான்குடி மீராபாலிகா வித்தியாலய மாணவ மாணவிகள் குடிநீருக்காக பெரிதும் அலைகின்றனர்.

மதிற்சுவர்களுக்கு மேலாக ஏறி வீதியோரங்களில் அமைந்துள்ள தேனீர்க் கடைகளில் மாணவர்கள் குடிதண்ணீர் கேட்கும் அவலக் காட்சியை (அமானுல்லா வீதியில்) பாடசாலை நாட்களில் வழமையாகக் காணமுடிகிறது.

கடைக்காரர்களும் அதிபரின் கவனக்குறைவைக் கண்டித்து சுடுசொற்களை மாணவர்கள்மீது பொழிகின்றனர். இந்நிலை கண்டு பெற்றார்கள் பலரும் மனவேதனை அடைகின்றனர்.

மாணவர்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணத்தக்க நடவடிக்கையை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொள்ள வேண்டுமென பெற்றோரும், அவதானிகளும் வலியுறுத்தி வருகின்றனர். (55)

---

# வர்த்தக ஊழியர்களுக்கு இந்த சம்பள நிர்ணய சபை அமையும்

வர்த்தக நிலையங்கள் விற்பனை நிலையங்கள் என்பனவற்றில் தொழில் புரிபவர்களுக்கு தனியான சம்பள நிர்ணய சபை ஒன்று அமைக்கப் படவுள்ளது.

இந்த ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகளில் ஏற்படும் குறைபாடுகள் குறித்து தொழில் திணைக்களத்திற்கு வரும் புகார்களையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

நாட்டிலுள்ள மொத்தவியாபார நிலையங்கள் சில்லறை, வியாபார நிலையங்கள் என்பவற்றில் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பணி புரிகின்றனர்.

இந்தச்சம்பள நிர்ணயசபை அடுத்தமாதம் 1-ஆம் திகதி முதல் இயங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஊழியருக்கு மாதாந்த சம்பளமாக ஆயிரம் ரூபா என சம்பள நிர்ணயசபை தீர்மானிக்கவுள்ளது என்றும் தொழில்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---

அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி!

**P.M.S. தங்கமாளிகை**

உரிமை: P. M. சுபைர்

170, பஜார் வீதி, வவுனியா

**P. M. S. GOLD HOUSE**

170, BAZAAR STREET, VAVUNIYA

(R/164)

---

## யாழ்நகரில் இன்றைய சினிமா

**வின்சர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறைநாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோனா..
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

105 வது நாளாக!!
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

---

# புத்தாண்டில் ஒளியூட்டும் தேசிய தீபம்போல்

# புதுவாழ்வு தர உங்களை அழைக்கின்றது!

# இலங்கை வங்கி - நம் தேசிய வங்கி



சோலைக் குயில் கூவுமொலி காதில் விழ
வாலைக்குமரியர் ஊஞ்சலாடி அகமகிழ
பட்டாசும் வாணவேடிக்கைகளும் கலகலப்பூட்ட — மற்றுமொரு
சித்திரைப் புத்தாண்டு மலரவுள்ளது.

தேசிய முன்னேற்றத்துக்கு ஒளியூட்டி வழிகாட்டும் தீபமான **இலங்கை வங்கி** இந்த மகிழ்ச்சிகரமான வேளையை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகின்றது.

1990 சித்திரை மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை புது வருடத்தை முன்னிட்டு எமது வடபிராந்திய வங்கிக் கிளைகள் முற்பகல் 10-00 மணிதொடக்கம் நண்பகல் 12-00 மணிவரை சுபமுகூர்த்த பரிமாறல்களுக்காகத் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அன்றைய தினம் சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு விசேட சலுகையாக இந்தச் சான்றிதழ்களுக்கு அதிகரித்த வட்டி வழங்கப்படும்.

## வங்கி வழங்கும் விசேட புத்தாண்டுப் பரிசுகள்

- கொள்வனவு செய்யப்படும் 6 மாத, 12 மாத முதிர்ச்சியுடைய சேமிப்புச் சான்றிதழ்களுக்கு முறையே 15.05%, 16.28%, வருடாந்த வட்டியாக வழங்கப்படும்.
- சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்வோருக்கு வங்கியின் சார்பாக கைவிசேஷம் வழங்கப்படும்.

**சேமிப்புச் சான்றிதழ்களின் கொள்வனவு விபரங்கள்:**

| சான்றிதழின் பெறுமதி | நீங்கள் செலுத்தவேண்டிய தொகை (6 மாதமாயின்) | நீங்கள் செலுத்த வேண்டிய தொகை (1 வருடமாயின்) |
|---|---|---|
| ரூபா 200/- | 186/- | 172/- |
| ரூபா 500/- | 465/- | 430/- |
| ரூபா 1000/- | 930/- | 860/- |
| ரூபா 5000/- | 4650/- | 4300/- |
| ரூபா 10,000/- | 9300/- | 8600/- |
| ரூபா 25,000/- | 23250/- | 21500/- |

*சேமிப்பு சான்றிதழ்களுக்கான அதிகரித்த வட்டிவீதம் 4—5—1990 வரை அமுலில் இருக்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

மலரும் புத்தாண்டில் நாட்டிலே அமைதியும் சமாதானமும் நிலைபெற்றுச் சுபீட்சம் பெருக வேண்டுமெனவும், இல்லம் தோறும் மகிழ்ச்சி பொங்கவேண்டுமெனவும் இலங்கை வங்கி வாழ்த்துகின்றது.

# இலங்கை வங்கி - தேசத்தின் வங்கியாளர்

# மாணவர் தலைவனின் கொலை; கராச்சியில் பதற்றம்

## வீதிகளில் கவசவண்டிகளும் டாங்கிகளும் பாதுகாப்பு ரோந்து

(கராச்சி)

பாகிஸ்தானின் நகரங்களில் ஒன்றான கராச்சி வீதிகளில் கனரக கவச வாகனங்களையும், டாங்கிகளையும் பாகிஸ்தான் அரசு நிறுத்தி உள்ளது.

சென்ற வெள்ளிக்கிழமை நடந்த தாக்குதலில் காயமடைந்த முக்கியமான மாணவர் தலைவர் இறந்து விட்டதால் வன்செயல்கள் ஏற்படக் கூடும் என அஞ்சி அரசு இவ்வாறு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

பெனாசிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் முன்னணியின் மாணவர் பிரிவுத் தலைவரான நஜீப் அகமட் தாக்கப்பட்டார். இதன் பின்னர் இவர் மருத்துவமனையில் காலமானார். அத்துடன் இக்கலவரங்களில் குறைந்தது பதினாறுபேர் வரை கொல்லப்பட்டார்கள்.

நஜீப் அகமட் இறந்த செய்தி புதன் கிழமை அதிகார பூர்வமுறையில் அரசினால் அறிவிக்கப்பட்டது. இம் மரணச் செய்தி மேலும் பல மோதல்களுக்கு வழி வகுத்து விடுமோ என்று கருதியே அரசு டாங்கிகளைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. கராச்சியில் இதற்கு முதல் இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை பாகிஸ்தானிய எதிர்க்கட்சித் தலைவர் அல்ரப் சூசையின் லட்சியம் ஈடேறும் வரை காலவரையறையற்ற உண்ணா விரதத்தை தொடங்கி இருக்கிறார். அவருடைய முகாஷிர் குவாமி கட்சியின் தொண்டர்களை விடுதலை செய்யும் வரை தனது போராட்டத்தை கைவிடுவதில்லை என கூறியிருக்கிறார். இதனால் கராச்சியில் மேலும் நெருக்கடிகள் அதிகரித்துள்ளன.

இந்த கோரிக்கையை ஏற்க மறுத்த அரசு அவரையும் விடுதலை செய்ய முடியாது என்றும் வேண்டுமானால் பேச்சுவார்த்தை நடத்தி அதன் பேரில் தீர்வு காணலாம் என்றும் கூறுகிறது.

இதற்கிடையில் தலைநகர் இஸ்லாமாபாத்தில் பெனாசிர் பூட்டோ தனது சொந்த மாகாணத்தில் உருவாகி வரும் நெருக்கடி குறித்து ஆலோசனையும் நடத்தி வருகிறார்.

## அமெரிக்க - சோவியத் உச்சிமகாநாடு மே இறுதியில்

(வாஷிங்டன்)

மே 30 ஆம் திகதி முதல் ஜூன் 3 ஆம் திகதி வரை அமெரிக்க, சோவியத் உச்சி மகாநாடு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் அறிவிப்பானது அமெரிக்க, சோவியத் வெளிநாட்டு அமைச்சர்கள் ஜேம்ஸ் பேக்கர், எட்வேட் ஷெவர்த்நைஜே இருவரின் சந்திப்பின் முடிவிலேயே அறிவிக்கப்பட்டது,

இம்மகாநாட்டில் வர்த்தக முதலீடு, கலாசார உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படும் என்றும், அண்டவெளி ஆராய்ச்சி, அணுசக்தியை அமைதிப் பணிக்காகப் பாவிப்பது பற்றிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

## புதுவருடத்தையொட்டி புகையிரத பயணிகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

புதுவருட கொண்டாட்டங்களை முன்னிட்டு புகையிரதங்களில் வரவர பயணிகள் தொகை பெருமளவு அதிகரித்து வருகிறது அவதானிக்க கூடியதாக உளள்து.

இவ்வதிகரிப்பு பற்றி யாழ், மத்திய புகையிரத நிலைய அதிகாரி மயில்வாகனம் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்

கடந்த ஏழுவருடங்களாக இவ்வளவு மக்கள் பயணம் செய்ததில்லை, இப்பொழுது தான் மீண்டும் பொதுமக்கள் ரயிலில்பயணம் செய்கின்றனர் என்றார்.

மேலும் அவர் கூறுகையில் பயணிகள் தொகை அதிகரித்துள்ள இவ்வேளையில் புகையிரத போக்குவரத்து சபையினர் விழாக்கால சேவை ... டத்து பயணிகள் நெருக்கடியை பெருமளவு தவிர்த்துக் கொள்ளலாம் தற்போது புகையிரதத்தில் பயணிகள் நெருசலிற்குள்ளாவதை கவனிக்க கூடியதாக இருந்தது என்றார்.

## மீண்டும் நோயாளர் நலன்புரிச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள நோயாளர் நலன்புரிச் சங்கம் கடந்த புதனன்று மறுபடி திறக்கப்பட்டது. புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட இக் கட்டிடத்தை யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் புஸ்பா சண்முக... ளர் நலன்புரிச் சங்கத்தின் தேவை பற்றியும், நாட்டில் கஷ்டமான வேளையின்போது நோயாளர் நலன்புரி சங்கம் செய்த சேவை பற்றியும் பாராட்டினார்.

இந்நோயாளர் நலன்புரி சங்கம் இந்திய இராணுவம் தமிழ்மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டபோது ...

## தொண்டமானாறு விளையாட்டுப் போட்டி

(யாழ் விளையாட்டு நிருபர்)

தொண்டமானாறு வன்னை வீதி கலைமகள் சனசமூக நிலையத்தின் 12-வது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப்போட்டியும் நடைபெறவுள்ளன.

மூன்று நாட்கள் மின் ஒளியில் கர பந்தாட்டச் சுற்றுப் போட்டியும், 14ஆம் திகதி ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டமும் ஆண்களுக்கு 10 மைல் மரதன் ஓட்டமும் நடைபெறும். (42)

## பங்குனி உத்தரம்

(பருத்தித்துறை)

இலங்கையின் இரண்டாவது கதிர்காமமெனப் பக்தர்களால் போற்றப்படும் தென்புலோலி தான்தோன்றி உபயகதிர்காமக் கந்தன் ஆலயத்தில் பங்குனி உத்தரத் திருவிழா வெகுசிறப்பாக நடைபெற்றது.

அன்றையதினம் காலை விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. நண்பகல் முருகப்பெருமான் வள்ளி தெய்வயானையுடன் திருவீதி உலா வந்து பக்த அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

மாலை 'நலம்தரும் நாம பஜனை'யும் இடம் பெற்றது. (25)

## அன்னை திரேசா ராஜினாமாச் செய்துள்ளார்

(கல்கத்தா)

கல்கத்தா நகரில் அநாதைச் சிறுவர்களுக்கும், ஆதரவற்றோருக்கும் புகலிடம் அளித்து வந்த அன்னை திரேசா, தனது பதவியை நேற்று முன்தினம் ராஜினாமாச் செய்துள்ளார்.

அண்மையில் இவர் கடும் சுகயீனமுற்று மருத்துவமனையில் இருதய சத்திர சிகிச்சை பெற்றிருந்தார். இதனால் இவர் தொடர்ந்தும் தனது பதவியில் இருக்க உடல்நிலை வாய்ப்பளிக்காமையினால் தான் தனது சேவையிலிருந்து ஓய்வு பெறுவதாகக் காரணம் காட்டியுள்ளார். இவருடைய ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ந்து இவருடைய பதவியை நிரப்புவதற்கு ஒருவர் நியமிக்கப்படுவார் எனவும் கல்கத்தா அநாதைகள் விடுதி அறிவித்துள்ளது.

## கொழும்புத்துறைக்கு குடி நீர்வழங்க யுனிசெப் உதவி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைமக்களுக்கு குழாய்மூலம் நீர்வழங்கும் திட்டம் யுனிசெவ் தாபன உதவியுடன் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இந்நீர்வழங்கல் திட்டம் சிறிய அளவு திட்டமாக இருந்தாலும் இன்னும் ஓரிருமாதங்களில் கொழும்புத்துறைப் பகுதி மக்களின நீர்த்தேவையைப் பெருமளவு பூர்த்தி செய்யக்கூடியதாக உள்ளது என்று யாழ். மாநகரசபை அதிகாரி தெரிவிக்கிறார். லோ)

# லித்வேனியாவுக்கு எதிராக உணவுப்பொருள் தடைவராது

## கொர்பச்சேவ் கூறியதாக பிரி. அமைச்சர் தகவல்

(மொஸ்கோ)

சோவியத்யூனியனில் இருந்து பிரிந்து சென்று சுதந்திரப் பிரகடனம் செய்த லித்வேனியாவுக்கு உணவுப் பொருட்களை ஒரு போதும் தடை செய்யாது என தன்னிடம் சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் உறுதி கூறி இருப்பதாக பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் கேட் கூறியுள்ளார்.

இவர் செவ்வாய்க்கிழமை மொஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய போதே இவ்வாறு குறிப்பிட்டார். இவர் சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவையும், சோவியத் வெளியுறவுத் துறை அமைச்சர் வுர்னாவேயும் சந்தித்து லித்வேனிய நெருக்கடிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

லித்வேனியா மீது மொஸ்கோ எந்தவிதமான பொருளாதார தடைகளையும் செய்யமாட்டாது எனவும், பேச்சுவார்த்தைகள் மூலமே இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் என்றும் கொர்பச்சேவ் உறுதிபடக் கூறினார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டிகள்

(யாழ் விளையாட்டு நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தின் விளையாட்டுத்துறை வெகு விரைவில் முன்னேற்றப் படுத்தப்படவுள்ளது. இதற்கான துரித நடவடிக்கைகளை கிளிநொச்சி டாவட்ட அரசாங்க அதிபர் திரு கே மாணிக்கவாசகர் மேற் கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் இதன் மூலம் பயன்பெறவுள்ளன இக்கழகங்கள் உதைபந்தாட்டத்தில் மட்டுமே கூடுதலான ஆர்வம் காட்டி வருகின்றன.

பாட்மின்டன். கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களில் கிளிநொச்சி மாவட்டம் பின் தாங்கிய நிலையிலே உள்ளது.

பாடசாலைகளில் கூட இவ் விளையாட்டுக்கள் பின் தங்கிய நிலையில் உள்ளது. (42)

### நெடுந்தீவு

## வைத்தியசாலை திருத்த வேலை

(நெடுந்தீவு)

பல மாதங்களாகத் திருத்தப் படாமல் கவனிப்பாரற்...

### பாண்டிருப்பு மகாவித்தியாலய

## குறைபாடுகளை நீக்குவதற்கு விடுதலைப்புலிகள் நடவடிக்கை

(அம்பாறை)

பாண்டிடிருப்பு மகாவித்தியாலயத்தில் நீண்ட காலமாக இருந்து வரும் தளபாடக் குறைவினாலும், வகுப்பறைக் கட்டிடம் போதாமையினாலும் மாணவர்கள் பல சிரமங்களுடன் கல்வி பயில வேண்டியுள்ளது.

கடந்த பல வருடங்களாக கல்வி இலாகா இப்பாடசாலையைக் கவனிக்காததால் இருந்து வரும் மேற்படி குறைபாடுகளைப் போக்க பாண்டிருப்புப் பொதுமக்கள் மற்றும் வசதி படைத்த வள்ளல்கள், பொது ஸ்தாபனங்கள் முன்வர வேண்டுமெனத் தமிழீழ விடுதலைப் புலிகள் பாண்டிருப்பு பொறுப்பாளர் திரு. வின்சன்ற் கோரியுள்ளார்.

இப்பாடசாலையில் நீண்ட காலமாக இருந்து வந்த குடிநீர்க் கிணறு இல்லாப் பிரச்சினையைத் தீர்க்க அண்மையில் பொதுமக்கள் கொட்டுக் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (48)

## ஜனசக்தி சனசமூக நிலைய 42-ஆவது ஆண்டு நிறைவுவிழா

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் அரசடி ஜன... டியில் பங்கு பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

வன்செயலால் முற்றாக அழிவடைந்த இப் பாடசாலையின் புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடை பெறும் இவ் வேளையில் பழைய மாணவர்களின ஒத்துழைப்பும் ஆலோசனையும பெறும் பொருட்டு இக் கூட்டம் விசேடமாகக் கூட்டப்படுகிறது.

## இடமாற்றம்

மேலும் அவர் கூறுகையில் பயணிகள் தொகை அதிகரித்துள்ள இவ்வேளையில் புகையிரத போக்குவரத்து சபையினர் விழாக்கால சேவையை புத்தாண்டுக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னதாகவே ஆரம்பிக்குமி

படி திறக்கப்பட்டது. புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட இக் கட்டிடத்தை யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் புஸ்பா சண்முகநாதன் திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் நோயா

இந்நோயாளர் நலன்புரி சங்கம் இந்திய இராணுவம் தமிழ்மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டபோது இராணுவ கெடுபிடிகளால் செயலிழந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

# எவரும் அடிமையாக வாழ்வதை நாங்கள் அனுமதியோம்

(காத்தான்குடி)

வடக்கும் கிழக்கும் இணைந்த எமது தமிழீழப் பிரதேசத்தில் எச்சமூகத்தவரும் அடிமையாக வாழ்வதை எமது ஜனநாயக அமைப்பு ஒரு போதும் அனுமதியாது. ஒரு ஜனநாயக நாட்டிலுள்ள சகல அடிப்படைச் சுதந்திரங்களையும் எமது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியானது இம் மண்ணில் வாழும் யாவருக்கும் பாரபட்சமின்றி நடைமுறைப்படுத்த ஆதரவளிக்கும். தமிழ்ப் பேசும் மக்கள் விடுதலைப்புலிகளினால்முழுச் சுதந்திரம் பெற்றவர்களாக வாழ்கிறார்கள் என்பதை நாமே சர்வதேச ரீதியில் நிரூபிப்போம்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் உறுதிபடக் கூறினார்.

காத்தான்குடி 05ஆம் குறிச்சியில் அமைந்துள்ள பத்ரிய்யா ஜும்மாப்பள்ளிவாசல் ஜமாத்தினர் சார்பாக தூதுக்குழு ஒன்று திரு. கரிகாலன் அவர்களை புதன்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியது

கடந்த 10 ஆண்டுகளாக இப்பள்ளிவாசல் மீதும், ஜமாஅத்தார்கள் மீதும் மத்திய அரசும் முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களமும் மேற்கொண்டு வரும் மத, மனித உரிமைகள் மறுப்புப்பற்றியும் இதனால் இம் மக்கள் அனுபவித்துவரும் இன்னல்கள்குறித்தும் இத்தூதுக் குழுவினர் இச் சந்திப்பின்போது எடுத்துக் கூறி மறுக்கப்பட்டுள்ள மத உரிமைகளையும், அடிப்படை மனித உரிமைகளையும் மீளப் பெற்றுத் தரும்படி வேண்டுகோள் விடுத்தனர்.

இவ் வேண்டுகோளுக்குப் பதிலளித்துப் பேசுகையில் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் கூறியதாவது:

''தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் ஆயுதங்களுடன் மட்டுமன்றி மக்களையும் இணைத்துக் கொண்ட சக்தி வாய்ந்தது என்ற பேருண்மை சர்வதேச ரீதியில் நன்குணரப்பட்ட இவ்வேளையில் பேரினவாத அடக்குமுறையை எதிர்த்து ஜனநாயக அரசியல் நீரோட்டத்திற்கு வந்துள்ள நாம், எதிர்காலத்தில் நாம் அனுபவித்த இன்னல்களை எமது மக்களு அனுபவிக்க அனுமதிக்காத வண்ணம் அச்சக்தியைப் பாவிப்போம்.''

''எமது மக்களின் சுதந்திர வாழ்விற்காக ஆயுதமேந்திப் போராடிய எமது இராணுவப் பிரிவு, இனி வருங்காலத்தில் மக்களின் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்காகச் செயலாற்றும். சமமான நீதி, நியாயம் என்பது எல்லாச் சமூகத்திலும் பாரபட்சமின்றி பேணப்படும்''

''யார் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி; எமது ஆளுமைக்குட்பட்ட மண்ணில் எவருமே அடிப்படை உரிமைகளில்லாதவர்களாக வாழ்வதை விடுதலைக்காகப் போராடி வெற்றி கண்டுவரும் நாம் ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டோம். உங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள உரிமை மீறல்கள் படிப்படியாகக்களையப்பட்டு சம சுதந்திரமடைந்த நிலையில் வாழவைக்க நிச்சயமாக நாம் நடவடிக்கை எடுப்போம்'' இவ்வாறு திரு. கரிகாலன் குறிப்பிட்டார்.

கூட்டுறவு

## சில்லறைவிற்பனை நிலையங்கள் கிராமங்களில் அமைக்க முடிவு

(கொழும்பு)

கூட்டுறவுமொத்தவிற்பனை நிலையம் கிராமங்கள்தோறும் அதன் சில்லறை விற்பனை நிலையங்களைத் திறந்து வைக்கவுள்ளதாக வர்த்தக வியாபார அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்குத்தட்டுப்பாடு ஏற்படுவதாலும், தரமான பொருட்கள் கிடைக்கவுமே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வருடாந்தம் 650 கோடி ரூபாவை வருமானமாக இந்த நிறுவனம் பெற்று வருவதாகவும் அவர் மேலும் சொன்னார்.

## திருத்த வேலை

(நெடுந்தீவு)

பல மாதங்களாகத் திருத்தப் படாமல் கவனிப்பாரற்றுக் கிடந்த நெடுந்தீவு வைத்திய சாலை மலகூடங்கள், மகப்பேற்று அறை ஆகியவற்றின் திருத்த வேலைகள் தற்பொழுது விரைவு படுத்தப்பட்டுள்ளன. இதற்கான ஏற்பாடுகளைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்கள் மேற்கொண்டுள்ளார். வைத்தியசாலையின் தேவைகள் அனைத்தும் விரைவில் நிவர்த்தி செய்யப்படும் என நம்பப்படுகிறது.

## வீச்சுவலை வீசத்தடை

(முல்லைத்தீவு)

நேற்று முன்தினம் இரவு வட்டுவாகலை அண்மித்த நந்திக் கடற் பகுதியில் வீச்சு வலை வீசி இறால் பிடித்த தொழிலாளர்களிடம் இறால், வலை என்பன பறிக்கப்பட்டன.

வட்டு வாசல் மீனவர்களின் நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையினால் இத்தொழிலிலீடுபட்டுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

முல்லைத்தீவில் அமைந்துள்ள நந்திக் கடல் இறால் உற்பத்தியில் சிறுகடல் தொழிலில் போ பெற்ற இடமாகத் திகழ்கிறது. இதுவரை காலமும் வட்டுவாசல் பகுதியில் குறுகிய எல்லைப் பிரதேசம் மட்டுமே இறங்கு வீச்சுக்குத் தடை விதிக்கப்பட்டு வாட்டு வீச்சுக்கு அனுமதிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் படுப்பு வலை, இழுப்பு வலை லைற் அத்தாங்கில் இறால் பிடித்தல் என்பன தடை செய்யப்பட்டிருந்தன.

இதற்குக்கரு அழிக்கப்பட்டு இறால் உற்பத்தி தடை செய்யப்படுவதே மிக முக்கிய காரணமாகக் கருதப்பட்டது.

எனவே பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் வழமை மாற்றம் பற்றிப் புதுக்குடியிருப்புப் பிரதேசப் பொறுப்பாளர் குணத்திடம் முறையிட்டுள்ளார்கள். (53)

## 42-ஆவது ஆண்டு நிறைவுவிழா

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 4-ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஆறு பேர் கொண்ட கர பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டி யாழ்.மாவட்ட ரீதியில் நடைபெறும். பலபிரபல்யம் வாய்ந்த கழகங்கள் இக் கர பந்தாட்டப் போட்டியில் பங்கு பெறுமெனஎதிர் பார்க்கப்படுகிறது.

இப்போட்டிக்கான சகல விபரங்களையும் இ. அமுதராசா, ஜனசக்தி சனசமூக நிலைய விளையாட்டு செயலாளர், அரசடி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது (42)

சனையும பெறும் பொருட்டு இக் கூட்டம் விசேடமாகக் கூட்டப்படுகிறது.

## இடமாற்றம்

பூநகரி பிரதேசசபை ஆயுர் வேத வைத்தியர் திரு த. நடராசா உப்பு வெளி ஆயுர் வேத வைத்தியசாலைக்கும், திருக்கோணமலை பிரதேச சபை உப்புவெளி ஆயுர்வேத வைத்தியர் பூநகரி பிரதேச சபைக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

கல்முனை நீர்ப்பாசன திணைக்கள

# அமைய ஊழியர்களை நிரந்தரமாக்கக் கோரிக்கை

(அம்பாறை)

''கல்முனை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கடமையாற்றும் நூற்றுக்கு மேற்பட்ட அமைய ஊழியர்கள் பத்துவருடங்களுக்கு மேலாக வேலைசெய்தும் நிரந்தரமில்லாது கஷ்டமுறுகின்றனர்.

இதுபற்றி உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும்'' அம்பாறை மாவட்ட உழைக்கும் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. கே. அருள்பிரகாஷுக்கு இந்த ஊழியர் மகஜர்ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகக் கடமையாற்றி வரும் எம்மில் சிலருக்கு புகையிரத இலவசப் பிரயாண அனுமதிச் சீட்டு, சுகயீன லீவு, சாதாரண லீவு ஆகியவைகள் கிடைத்தும் வேலை நிரந்தரமாக்கப்படவில்லை எனவும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது,

தற்போது இத்திணைக்களம் இரண்டாகப் பிரிக்கப் பட்டு ஒன்று மாகாணசபையின் கீழ் இயங்கும் அலுவலகமாகவும், மற்றது மத்திய அரசின் கீழ் இயங்கும் அலுவலகமாகவும் இயங்குகின்றன

இந்த அமைய ஊழியர்கள் சிலர் மாகாண அரசு நீர்ப்பாசன அலுவலகத்தின் கீழ் வேலை செய்கின்றனர். இருந்தும் மாகாண அரசு புதிதாக சிலரை நிரந்தர நியமனம் செய்து இங்கு வேலைசகு அனுப்பியுள்ளது. ஆனால் இஙகுள்ள அமைய ஊழியர்களை நிரந்தரமாக்க முயற்சிக்கவில்லை.

இலிகிதர், தட்டெழுத்தாளர், வேலை மேற்பார்வையாளர்கள், காவலாளிகள், கூலியாட்கள் போன்ற பல தரப்பட்ட ஊழியர்கள் எங்களிடமிருந்து நிரந்தரமாக்க மத்திய அரசு பலதடவைகள் விபரங்களைக்கோரியிருந்தது.

அவைகள் அனுப்பப்பட்டும் இதுவரை எதுவித பலனும் கிட்டவில்லை

இவ்வாறு நிரந்தர நியமனமின்றி எம்மிடையே பலர் விரக்தியுற்றுள்ளனர். இது விடயத்தில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றோம். இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (48)

## பாண்டிருப்புக் கிராமத்தில் தையல் பயிற்சி நிலையங்கள்

(அம்பாறை)

பாண்டிருப்புக் கிராமத்தில் விடுதலைபபுலிகளால் இரண்டு தையல் பயிற்சி நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இக்கிராமத்தில் படித்து வேலையற்றிருக்கும் இளம் பெண்கள் சுயதொழில் வாய்ப்பைப் பெறுமுகமாகவே மேற்படி பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

இரண்டு நிலையங்களிலும் 50 பெண்களும், இரண்டு ஆசிரியைகளும் சேர்க்கப்பட்டுள்ளனரென்றும், சில தினங்களில் இவை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படுமென்றும் விடுதலைப் புலிகள் பாண்டிருப்புப் பொறுப்பாளர் திரு. வின்சன்ற் தெரிவித்தார்.

யாழ். புகையிரத நிலையத்தில்

# ரயில் பயணிகளின் நெருக்கடிக்கு 'சோல்ற்' நடவடிக்கை

(யாழ்ப்பபாணம்)

யாழ். புகையிரதம் மூலம் யாழ்ப்பாணத்தை நோக்கி பயணிகள்வரும் தொகை அதிகரித்துள்ளதை தொடர்ந்து பயணிகளின் வசதிகளை கருத்தில் கொண்டு விடுதலைப் புலிகளின் மாணவர் அணியினர் (SOLT) புகையிரத நிலையத்தில் இருந்து மக்கள் யாழ்ப்பாண நகரை நோக்கி செல்வதற்கு வேண்டிய வாகனங்களை வாடகைக்கு அமர்த்திக்கொள்ள வசதியாகவும் பயணிகள் தமது விருப்பப்படி வாகனங்களைத் தெரிவு செய்துகொள்ளவும் உதவியாக வாகனங்கள் நிறுத்தும் இடத்தை ஒழுங்கு செய்துள்ளனர்.

இதனால் புகையிரத நிலையப் பயணிகள் நெரிசல் பெருமளவு தவிர்க்கப்பட்டுள்ளது. (லோ)

நிவாரணம்

# வழங்குவதில் சோர்வில்லை விசாரணைகளில் தாமதம்

- அன்ரன் அல்பிரட்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு நிவாரணப் பணத்தை வழங்குவதில் நாம் எதுவித சோர்வும் காட்டவில்லை. விசாரணைகள் செய்வதில் சில தடங்கல்கள் ஏற்படுவதே நிவாரணப் பணம் வழங்குவதில் சில தாமதங்கள் ஏற்படுவதற்குக் காரணமாகும்.

நிவாரணத் தொகையைப் பெற்றுக் கொடுக்கும் தரகர்களுன் இடையூறுகளும், ஒருவரின் இறப்பை மையமாகக் கொண்டு பல மனைவிகள் நிவாரணத் தொகைக்கு விண்ணப்பிப்பதுமே நிவாரணம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக யாழ். அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் தெரிவிக்கிறார்.

அண்மையில் ஈழநாதம் பத்திரிகையில் நிவாரணப்பணம் வழங்குவது சம்பந்தமாகவந்த செய்திக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (லோ)

# மீண்டும் இரவு நேரம் வீதிகளில் மின் ஒளி

(சித்தங்கேணி)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்தின் கீழ் உள்ள பிரதான வீதிகளில் கடந்த காலங்களில் ஒளிராதிருந்த வீதி மின் விளக்குகள் தற்போது ஒளிரத் தொடங்கியுள்ளன.

பழுதடைந்திருந்த வீதி விளக்குகளை சங்கானை உப அலுவலகத்தினர் திருத்தம் செய்ததோடு சில இடங்களில் "ரியூப் பல்பு" களையும் அமைத்துள்ளார்கள்.

இதனால் இரவில் இவ்வீதிகள் ஒளிவீசி அழகாகக் காட்சியளிக்கின்றன. (23)

## நயினாதீவு உற்சவம்

(நெடுந்தீவு)

அடுத்த மாதம் ஆரம்பமாகும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பாதுகாப்பு, சுகாதாரம் குடிநீர் வசதி போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம் முறை சிங்கள யாத்திரிகர்களும் கூடுதலாக வருவார்கள்எனஎதிர்பார்க்க படுகிறது

## பெயர் மாற்றம்

(வவுனியா)

வவுனியா மதியா மடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வவுனியா விவேகானந்தா வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விடுத்த கோரிக்கையை அடுத்து மாகாண கல்வி அமைச்சு இப்பெயர் மாற்றத்திற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

## வெளிநோயாளர் பிரிவில் திருட்டுக்கள்

(ஈச்சமொட்டை)

யாழ். பெரியாஸ்பத்திரியில் வெளிநோயாளர் பிரிவில் திருட்டுக்கள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சிலருடைய கைப்பைகள் வெட்டப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது. அத்துடன் அடையாள அட்டைகளும், கிராமசேவையாளர்கொடுத்த உணவுமுத்திரை அத்தாட்சிப் பத்திரங்களும் காணாமல் போய் உள்ளன.

## சிறுவர் தின விழா

(கரவெட்டி)

வட இந்து மகளிர் கல்லூரி கனிஷ்ட பாடசாலையில் அண்மையில் கல்லூரி அதிபர் திருமதி சி. சின்னத்தம்பி தலைமையில் சிறுவர் தின விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ் வைபவத்தில் இக் கல்லூரியில் கல்வி பயிலுகின்ற சகல சிறுவர்களும் கலந்து தமது திறமைகளை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (18)

## எம். சி. ஞாபகார்த்த நினைவு மண்டபம்

(கரவெட்டி)

இலண்டனில் வசிக்கும் உடுப்பிட்டியைச் சேர்ந்த மக்கள் வல்வெட்டியில் அமரர் எம். சி. சுப்பிரமணியம் ஞாபகார்த்த நினைவு




அன்னைக்கு எமது அஞ்சலிகள்!

SRI VIGNESWARA STORES
GENERAL MERCHANTS & COMMISSION AGENTS
Kandy Road, Chavakachcheri
ஸ்ரீவிக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்
கண்டி றோட், சாவகச்சேரி
(B/524)



வெளி நிலை விரிவுரைகள் 1990/91

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

- கலைமாணி B. A.
- விஞ்ஞான மாணி B. Sc. புள்ளிவிபரவியல்
- வணிகமாணி B.Com

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது விண்ணப்ப முடிவுத் திகதி 15. 4. 1990 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(R.167)



தியாகச் சுடர்



அன்னை பூபதிக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி!

காரைநகர் வர்த்தக சங்கம்
தீபக மக்கள்
R/163



அன்னை பூபதிக்கு அஞ்சலி!

சைவ உணவுகளுக்கும் குளிர்பான வகைகளுக்கும் நாடுங்கள்

அம்பாள் கபே
கொரவப்பொத்தானை வீதி,
வவுனியா.
(R/165)



பிறக்கும் புத்தாண்டில்

எமது இளம் சந்ததியினருக்கும்
வாடிக்கையாளருக்கும்
நண்பர்கள், அன்பர்கள்
அனைவருக்கும்

புத்தாண்டு வாழ்த்துகளை

தெரிவித்துக் கொள்கிறோம்



வீரத் தமிழ்த்தாய் அன்னை பூபதிக்கு
எமது அஞ்சலி!
சுவைமிக்க மாமிச உணவு வகைகளுக்கும்
குளிர்பானங்களுக்கும் நாடுங்கள்
வவுனியாவில்





அன்னை பூபதிக்கு அஞ்சலி!

எமது அஞ்சலி!
சுவைமிக்க மாமிச உணவு வகைகளுக்கும்
குளிர்பானங்களுக்கும் நாடுங்கள்
வவுனியாவில்

**ஞானகிரி ஹோட்டல்**

விசேட ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

த. சிவராஜா
ஞானகிரி ஹோட்டல்
கண்டி வீதி,
வவுனியா.
(R-166)

புத்தாண்டு வாழ்த்துகளை
தெரிவித்துக் கொள்கிறோம்

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**

பிரபல மொத்த சில்லறை வியாபாரம்
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,

இலண்டனில் வசிக்கும் உடுப்பிட்டியைச் சேர்ந்த மக்கள் வல்வெட்டியில் அமரர் எம். சி. சுப்பிரமணியம் ஞாபகார்த்த நினைவு மண்டபம் நிறுவுவதற்கு பணம் வழங்கியுள்ளனர்.

நிர்மாணிக்கப்படவிருக்கும் இம் மண்டபத்தில் பாலர் பாடசாலையும், மகளிர் தையல் பயிற்சியும் நடாத்தவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (18)



அஞ்சலி!

**கமலா ஸ்ரோர்ஸ்**

(பலசரக்குக் கடை)
உரிமையாளர் : துரைஐயா
ஆனைக்கோட்டை றோட், நவாலி
(R/170)

## "லொறி பொடி அடித்தல்"
## கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தின் புதிய இசூஸ் லொறிக்கு புதிய உடற்கோப்பு அமைப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவங்களுக்கும் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும். உரிய விண்ணப்பங்களை 20-4-90 க்கு முன் பொது முகாமையாளர், பல. நோ. கூ. சங்கம், பூநகரி என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலில் தொடர்பு கொள்ள விரும்புவோர் விலாசமிடப்பட்ட கடித உறையுடன் மீளளிக்கப்படாத ரூபா 5/- தபாற்கட்டளை செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

பொது முகாமையாளர்
பூநகரி ப. நோ. கூ. சங்கம்
பூநகரி.
(B/743)



அன்னை
பூபதிக்கு
எமது
அஞ்சலிகள்!

**ஸ்கை வீடியோ மூவிஸ்**

நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

- வீடியோ படப்பிடிப்பு
- கலர் படப்பிடிப்பு
- கறுப்பு வெள்ளை படப்பிடிப்பு
- பாடல் பதிவு

வீடியோ கசற் வாடகைக்கும் பெற்றுக் கொள்ள

**SKY VIDEO MOVIES**
Navaly Road, Anaicoaddai

## ஞானவயிரவர் சனசமூக நிலையம்
முடமாவடி - திருநெல்வேலி கிழக்கு.

## புத்தாண்டு விழா

திகதி 15-4-90 ஞாயிற்றுக்கிழமை
காலம்: காலை 6-00 மணி முதல்
இடம்: முடமாவடி மைதானம்

நிகழ்ச்சிகள்:
- 20 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி
- 10 மைல் மரதன் ஓட்டம்
- 05 மைல் மரதன் ஓட்டம் (உள்ளூர்)

மாலை நிகழ்ச்சி: கரபந்தாட்டப்போட்டி

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 15-4-90 காலை 6-00 மணிக்கு முன் முடமாவடி மைதானத்தில் சமுகம் தருமாறு கோரப்படுகின்றனர்.

விளம்பரம் அன்பளிப்பு
R 174 M/S Delmege Forsyth & Co Ltd

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!

*Crank Shaft Grinding, Cylinder Reborying, Line Borying*
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

**யந்திரம்ஸ்**

366, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
B,585

**சிந்தனைக்கு**

என்று தணியுமிந்த
சுதந்திரதாகம்
என்று மடியுமெங்கள்
அடிமையின் மோகம்

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 13 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2202

## விழித்திருக்கத்தான் வேண்டும்!

"எச்சரிக்கை தேவை" என்ற தலைப்பில் நேற்றுத்தான் நாம் தலையங்கம் எழுதியிருந்தோம்.

இத் தலையங்கம் வெளிவருவதற்கு முன்பே நடந்துள்ள சில சம்பவங்கள் இத் தலையங்கம் எத்துணை அவசியமென்பதை எடுத்துக் காட்டுகிறது.

பருத்தித்துறையிலும் திருக்கோணமலையிலும் இரண்டு தினங்களுக்குமுன் நடந்த சம்பவங்கள் தற்செயலாக நடந்தவை என்று ஒதுக்கிவிட முடியாது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம்கட்டப் பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் திருக்கோணமலையில் பாடசாலையொன்றில் முகாமிட்டிருந்த பொலிசார் அவ்வழியால் சென்ற பெண்களுடன் சேட்டை செய்து பிரச்சினையை உருவாக்க முனைந்துள்ளனர்.

இதேபோல் வடக்கே பருத்தித்துறையிலும் வீதியால் சென்ற பெண்களிடம் சேட்டை செய்து பிரச்சினையைக் கிளப்ப முயன்றிருக்கின்றனர்.

திருக்கோணமலையிலும் பருத்தித்துறையிலும் பொலிசார் பெண்களிடம் சேட்டை விட்டிருக்கின்றனர்.

இரண்டு இடங்களிலும் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டிருக்கின்றது.

மக்களுக்கு ஆத்திரமூட்டும் செயல்களைப் பொலிசார் எவ்வித காரணமுமில்லாமல் தொடங்கியிருக்கின்றனர் என்பது தெளிவு.

1977 ஆம் ஆண்டில் பொதுத்தேர்தல் முடிந்து ஜே. ஆர். ஆட்சிபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டதும் நாடு முழுவதும் பயங்கர இனக்கலவரம் வெடித்தது.

யாழ்ப்பாண நகரில் சென்பற்றிக்ஸ் கல்லூரி

---

# வடக்கு - கிழக்கு

# கிழக்குக் கரையில் வாய்ப்புக்கள்

நாட்டின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடும்போது கிழக்கு மாகாணம் கல்வி நிலையில் மிகவும் பின் தங்கியதாகவே இருக்கிறது. இம் மாகாணத்தில் வாழும் இளைஞர்களும் யுவதிகளும் வாழ்க்கையிலும் அபிவிருத்தி நிகழ்வுப் போக்கிலும் பங்கெடுப்பதற்கு போதியளவில் பயிற்றப்படாதவர்களாகவே இருக்கிறார்கள். அதனால்பண்ணைத் தொழிலாளர், சிற்றூழியர், காவலாளர் போன்ற தேர்ச்சியற்ற தொழில்களையே அவர்களால் பெற்றுக் கொள்ள முடிகிறது. தொழில் நுட்ப, தொழில் பயிற்சிகளுக்கு அறவே வசதிகளில்லை. இந்த வகையில், கிழக்கிலங்கை தொழில்நுட்பக் கழகம் மட்டுமே ஓரளவுக்கு வசதிகளை வழங்கி வருகிறது. ஒரு காலத்தில் இப்பகுதியின் முதன்மை தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரியாக விளங்கிய ஹார்டி தொழில் நுட்பக் கல்லூரி இப்பொழுது சீர் குலைந்த நிலையில் இருக்கிறது. தொழில் பயிற்சி வசதிகளை விருத்தி செய்யும் பொருட்டு இக்கல்லூரி உடனடியாக புனருத்தாரணம் செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

1983ன் பின்னர் இனப் போராட்டம் தீவிரமடைந்ததையடுத்து இப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த பெரும்பாலான கட்டடங்கள் ஒன்றில் சேமடைந்துள்ளன, அல்லது முற்றாகஅழிக்கப்பட்டுள்ளன. இக்கட்டடங்களை புனரமைப்பதற்கு மேசன்மார், தச்சர்கள் போன்ற தொழில் தேர்ச்சி பெற்ற பெருந் தொகையானோர் தேவைப் படுகின்றனர். இப்பிரதேசத்தில் இத்தகு பயிற்சி பெற்ற ஆட்கள் போதியளவில் இல்லை. இங்கு நிலவும் கொந்தளிப்பு நிலை காரணமாக நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து (தேர்ச்சிபெற்ற தேர்ச்சியற்ற) தொழிலாளர்கள் இங்கு வருவதற்கு தயங்குகிறார்கள். இதன் காரணமாக, புனருத்தாரண வேலைகளுக்கென கிழக்குப் பிரதேசத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் செலவழிக்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. சில கட்டடங்களில் ஓரளவுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக் வாய்ப்புக்கள் காணப்படுவதளால் தொழிற் பயிற்சிமையங்களை உடனடியாக நிறுவுதல் பயனுள்ள ஒரு முயற்சியாக இருக்கும்.

### பல்கலைக்கழகம்

கல்வித்துறையைப் பொறுத்த வரையில் கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்பகுதியில் 1984 வரையில் பல்கலைக்கழகம் எதுவும் இருக்கவில்லை. பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியாக கிழக்குப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. எமது பல்கலைக் கழகங்கள், பிரிட்டிஷ் பல்கலைக்கழக மாதிரியிலேயே அமைக்கப்பட்டுள்ளன. இந்த மாதிரி பல உள்ளார்ந்த குறைபாடுகளைக் கொண்டதாகும். இந்த முறைமையின் முதன்மையான குறிக்கோள் கல்வியின் பொருட்டு கல்வி என்பதாகும். கிழக்கு பல்கலைக் கழகத்துக்கான பெருந்திட்டம்இந்த பிரிட்டிஷ் பாரம்பரியத்திலிருந்து விலகி, வித்தியாசமான உயர்கல்வி நிறுவனமொன்றை நிறுவுவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. கல்வியை வழங்குவதுடன் மட்டும்நின்றுவிடாது இப்பிரதேச அபிவிருத்திக்கு ஒரு கிரியா ஊக்கியாக இப் பல்கலைக்கழகம் செயற்பட வேண்டுமென பெருந்திட்டம் எதிர்பார்த்தது. இந்த நோக்கத்தை எய்துவதற்கான முதற்படியாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் கொண்டிருந்த இணைப்புத் துண்டிக்கப்பட்டு கிழக்கு பல்கலைக் கழகம் என்ற பெயரில் இது தனியொரு பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது.

பேராதனைப் பல்கலைக் கழகத்துடனான இணைப்பினைத் துண்டித்து புதிதாக உருவாக்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகம், பின்வருவனவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதன்மூலம் உள்ளூர் சமூகத்துக்கான அதன் கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப் பட்டது.

1. உள்ளூர் கைத்தொழில்
2 விவசாயம்
3 கல்வி

பாடத்திட்டம் மீளமைக்கப் பட்டது. ஆரம்ப குறிக்கோள்களை எய்துவதற்காக கணிசமான அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு வளாகமும் ஒவ்வொரு துறையில் சிறப்புத் தேர்ச்சி கொண்ட பல வளாகங்களைக் கொண்ட, ஒரு பல்கலைக் கழகமாக அது அமைக்கப்படவிருந்தது. உயிரியல் விஞ்ஞானங்கள் மற்றும் இயற்கை விஞ்ஞானங்கள் துறைகள் வந்தாறு மூலையிலும், வணிகம் மற்றும் பண்பாட்டுத் துறைகள் மட்டக்களப்பிலும் அமைந்திருந்தன. பல்கலைக் கழகத்துக்கான பெருந்திட்டத்தின்படி, கடல்வாழ் உயிரின கற்கைபீடம் திருகோணமலையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியிருந்தது.

### மூலவளங்கள்

கிழக்கு மாகாணம் மூல வளங்கள் குன்றிய ஒரு பிரதேசம் என்றே கூற வேண்டும். இப்பகுதியைப் பொறுத்த வரையில் நீர்வளமே - நன்னீரும் உப்புநீரும் - பிரதான மூலவளமாக இருக்கிறது. பொருளாதார ரீதியில் அகழ்ந்தெடுக்கக் கூடிய, இங்கு காணப்படும் ஒரே கனிப் பொருள் இல்மனைட்டாகும். வடக்கில் பாரிய கண்ணாடி மணல் திட்டுக்கள் காணப்படுகின்றன. இல்மனைட்டைப் பொறுத்த வரையில் உலகின் மிக வளமார்ந்த படிவங்களில்

**விக்டர்**
**சந்தியாபிள்ளை**

ஒன்று எம்மிடம் இருக்கிறது. புல் மோட்டையிலேயே இப் படிவுகள்பெருமளவில் காணப் படுகின்றன. இங்கிருந்து ஆண்டொன்றுக்கு 150,000 மெட்ரிக் தொன் செப்பனிடப்பட்ட இல்மனைட்டைப் பெற்று, சந்தைப்ப த்த முடியும்.

செப்பனிடப்பட்ட இல்மனைட்டைப் பொறுத்த வரையிலும் கூட, எமது போட்டி நாடுகளிலும் பர்க்க சார்பு ரீதியில் நாங்கள் நல்ல அனுகூல நிலையிலேயே இருக்கிறோம். எமது படிவுகளிலிருந்து குறைந்தபட்சம்

உலகின் மிகப் பெரிய உற்பத்தி நாடுகளில் ஒன்றான அவுஸ்திரேலியா 50% மட்டுமே செப்பனிடப்பட்ட இல்மனைட் தாதினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இருக்கிறது. சில சட்டங்களில் இந்த விகிதம்5% வரையில் வீழ்ச்சி யுற்றுச் செல்கிறது. இப்பொழுது ஆண்டொன்றுக்கு 100,000 தொன் இல்மனைட்டே அகழ்ந்தெடுக்கப் படுகிறது.

நீரியல் துறையில் நீரின் தரம் குறித்து மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகள், முல்லைத் தீவிலிருந்து பொத்துவில் வரையில் அமைந்துள்ள நீர் நிலைகள் இறால் வளர்ப்புக்கு உகந்தவை என்பது கண்டறியப்பட்டுள்ளது. 1980களின் ஆரம்பத்தில் தனியார் நிறுவனமொன்றினால் மட்டக்களப்பில் அமைக்கப் பட்ட இறால் பண்ணை இத் துறையில் மேற்கொள்ளப் பட்ட ஒரு முன்னோடி முயற்சியாகும். இது மிகவும் வெற்றிகரமான முறையில் செயற்பட்டுக் கொண்டு வந்தது. ஓரளவுக்கு செறிவுமிக்க வளர்ப்பு முறையினைப் பிரயோகித்த இந்தப் பண்ணை, உலகில் பதியப்பட்ட மிக உயர்ந்த அறுவடையைப் பெற்று சாதனை படைத்தது. இந்த முறையின் கீழ் பல நாடுகள் ஹெக்டயார் ஒன்றுக்கு சராசரி 1000 - 1200 கிலோகிராம் அறுவடையையே பெறுகின்றன. ஆனால், (1987இல் சேதப்படுத்தப்பட்டு, பின்னர் செயலிழந்து போன) கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில், நீரின் தரம் காரணமாக ஹெக்டயார் ஒன்றுக்கு 2000 கிலோகிராமுக்கும்கூடிய அறுவடை பெறப்பட்டது.

இப்பண்ணை 1987இல் சேதப்படுத்தப்படாதிருந்தால்,கிழக்கு கரையில் ஏராளமான சிறு பண்ணைகளை நிறுவுவது சாத்தியமாகியிருக்கும். உப்பு நீரேரிகளைச்சுற்றி வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பயனடைந்திருப்பார்கள். இப்பகுதியில் உவர்த்தன்மை காரணமாக நெற்செய்கை பண்ணப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இப்பொழுது கைவிடப் பட்டிருக்கிறது நீர் வாழ் விலங்கின வளர்ப்புக்கே இப்

---

## ஊர்சுற்றி

**எழுதுவது**

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்? என்று கேட்டபடியே நண்பர் வந்துஎதிரில்அமர்ந்தார்.

நான் என்னய்யா நினைப்பதற்கு இருக்கிறது? என்று பதிலளித்தேன்.

என்னையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.

ஏன் இப்படிப் பார்க்கிறீர்? என்று கேட்டேன்.

'இதில் ஏன் உட்கார்ந்திருக்கிறீர். எழுந்து எங்கேயாவது போய்த் தொலைய வேண்டியது தானே! என்றார் நண்பர்.

'விடுதலைப் புலிகளும் ஒரு பலம் வாய்ந்த அரசாங்கத்தின் நிலையில் தான் இலங்கை அரசுடன் பேச்சு நடத்திக் கொண்டிருக்கிறது' என்றார் நண்பர்.

'இதிலென்ன சந்தேகம்' என்றேன் நான்.

'உமக்கு எங்கே இது புரியப் போகிறது. விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் எங்கள் பிரச்சினைகள் பற்றித் தானே பேசுகிறார்கள். நாங்களே எங்கள் பிரச்சனைகளை நேரடியாகப் பேசினால் என்ன? இப்படிச் சிலர் தூதுக் குழுவாக அரசுடன் பேசப் புறப் பட்டுவிடுகிறார்கள். இது அவர்களின் தெரியாத்தனமா அல்லது தெரிந்தும் தெரியாத மாதிரி வழமையான தங்கள் சொந்தக் காரியங்களைச் செய்யும் புத்தியா? என்பது தான் தெரியவில்லை.

தலைவன் மக்களுக்கு வழிகாட்டுபவன். தலைவனைப் பின்பற்றியும் தலைவன் சொற்படியும் மக்கள் நடக்கா விட்டால் மக்கள் மந்தைக் கூட்டமாகி விடும், எதிரிகளுக்கு இது சாதகமாகி விடும். அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் பேச்சு நடத்துகிறார்கள் என்றால் நிரந்தரமாகா

மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த களியாட்ட விழாவிற்குள் நுழைந்த பொலிசார் அங்கு கலாட்டா செய்து கலகத்தை ஆரம்பித்து வைத்தனர்.

எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்ததுபோல் முதலில் ஜே. ஆரும், ''போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்'' என்று சூளுரைத்து வகுப்புவாதத் தீயைப் பரப்பினார்.

நிலைமை கட்டுக்கடங்காமல் போனதும்தான் ''அரசுக்கு எதிரானவர்களும் பொலிஸ் படையில் இருக்கின்றனர்'' என்று கூறினார்.

இப்பொழுதும் நிலைமை மாறிவிட்டதாகச் சொல்லமுடியாது.

இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவிலேயே அமெரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த (சி. ஐ ஏ) அதிகாரி இருந்தது பல வருடங்களுக்குப் பின்னர்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

இலங்கைப் பொலிஸ் சேவைக்குள் வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவு நுழைந்து இலங்கை அரசுக்கு எதிராகவும் இலங்கையில் அமைதிக்கும் சமாதானத்துக்கும் எதிராகவும் செயல்படமாட்டாதென்று சொல்லிவிட முடியுமா?

இது மட்டுமல்ல. பொதுமக்கள் மத்தியிலும் வெளிநாட்டுப் புலனாய்வுப்பிரிவு பல்வேறு வேஷங்களில் ஊடுருவியிருக்கிறதென்பதை மக்கள் நினைவில்கொண்டு அவதானமாகவும் விவேகமாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

இந்தியப் படையை வெளியேற்றியபின் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயுள்ள நட்புறவு நீடிக்குமா என்ற கேள்வியும் இன்றைய அமைதி தொடருமா என்ற கேள்வியும் சாதாரணமான கேள்வியென்று நினைத்துவிடக்கூடாது.

இப்பொழுதுள்ள நட்புறவையும் அமைதியையும் கெடுப்பதற்குச் சில தீய சக்திகள் முனையும் அதேசமயம் இவற்றைக் கண்டு மக்கள் ஏமாறவும் கூடாது. மயங்கிவிடவும் கூடாது. மக்களும் விழிப்புடனிருக்க வேண்டியது அவசியம்.

---

கின்றன. கட்டடம் கட்டுதல் மற்றும் அது சம்பந்தப்பட்ட துறைகளில் உடனடி வேலை

3. கல்வி

இந்நோக்கங்களை எய்தும் வகையில் பல்கலைக் கழக

70-80% செப்பனிடப்பட்ட இல்மனைட் தாதைப்பெற்றுக் கொள்ள முடியும். ஆனால்,

விலங்கின் வளர்ப்புக்கே இப் பகுதி உகந்ததாகும்.

நன்றி: பொருளியல் நோக்கு

---

# வாழைப்பாடி ராமமூர்த்திக்கு ஒரு பகிரங்கக் கடிதம்

ராஜீவ் காந்தியை தாக்க முயன்ற கடற்படை வீரரை கடந்த வாரம் திரு. பிரேமதாசா விடுதலை செய்தது இந்தியாவை அவமதிப்பதற்குச் சமம் என்று கூறி இந்திரா காங்கிரஸ் கட்சியினர் சென்னையில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியதாகத் பத்திரிகைகளில் படித்தோம்.

இது எங்கள் நாட்டின் உள்வீட்டுப் பிரச்சினை ஏற்கனவே நீங்கள் இதில் தலையிட்டு ''தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்'' என்று நாட்டை விட்டே சென்று விட்டீர்கள் மீண்டும் ஏனையா குப்பையைக் கிளறுகிறீர்கள்?

ஈழத் தமிழர் பிரச்சினையில் உங்கள் கட்சித் தலைவர் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் இராணுவம் செய்துள்ள அட்டூழியங்களுக்காக திரு. ராஜீவ் காந்தி மீது ஒரு சர்வதேச 'நுறண்பர்க் ட்ரயல்'பாணி வழக்கு ஒன்றை நடத்த ஈழத்தமிழர்கள் கோருகின்றோம். நீங்கள் சம்மதிப்பீர்களா?

கண்ணகி பிறந்த மண்ணிலே பிறந்த நீங்கள் இந்த மண்ணில் உங்கள் இராணுவத்தினரின் மிருகத்தனமான கற்பழிப்புக்கும் பலியான எங்கள் தாய்மார்களினதும் சகோதரிகளினதும் கண்ணீருக்கும் கம்பலைக்கும்எப்போது பதில் சொல்லப்போகின்றீர்கள்?

சரண் அடைகின்ற போர் வீரர்களைக் கொல்லக்கூடாது என்பது யுத்த தர்மம் ஆனால் சரணடைந்த சிவிலியன்களைக் கூட ''பவன் நடவடிக்கையின்'' போது இந்திய இராணுவம் கொன்றது எந்த வகை தர்மத்தைச் சேர்ந்தது.

உங்களுடைய நாட்டில் சுங்கப் பகுதிகளில் பெண்களைப் பெண்களே சோதனையிடுவதை நாங்கள் பார்த்திருக்கிறோம். ஆனால் இந்த மண்ணில் உங்கள் ஜவான்களும் அதிகாரிகளும் சோதனை என்ற பெயரால் எங்கள் தாய்மார் மாணவியரை சோதனையிட்ட விதம் எந்த நாகரிகத்தைச் சேர்ந்தது?

## மக்கள் மடல்

வயது முதிர்ந்த நடக்க முடியாத பெரியவர்களையும் தாய்மார்களையும் பதுங்கு குழிகளுக்கு உள்ளே வைத்து ''கிரனேட்'' தாக்குதல் நடத்திக் கொன்றார்கள் உங்கள் ஜவான்கள் இது எந்த தர்மத்தைச் சேர்ந்தது?

ஈழதேசிய இராணுவம் என்ற பெயரில் பால் மணம் மாறாப் பிஞ்சுகளைக் கைது செய்து எடுத்துச் சென்றது. இதற்கு என்ன விளக்கம் கூறுகின்றீர்கள் அடையாள அட்டை இல்லாதவர்கள் என்பதற்காக எத்தனை இளைஞர்களை உங்கள் இராணுவத்தினர் பிடித்து எல் ரி.ரி. ஈ. என்று கூறிக் கொலை செய்தார்கள் உங்கள் நாட்டில் அடையாள அட்டை இருக்கின்றதா? எத்தனை வயதிற்குப் பின்பு அடையாள அட்டை இந்த நாட்டில் வழங்கப்படுகின்றது? என்பது உங்கள் ஜவான்களுக்கு தெரியுமா? இந்த அப்பாவிகளின் உயிரைப்பறித்ததற்கு எந்தச் சட்டத்தில் இருந்து நியாயம் காட்டப் போகின்றீர்கள்?

அத்துமீறியசில கற்பழிப்புக்கள், படுகொலைகள் நடந்தபோது, துணிந்த சில மறவர்கள் உங்கள் அதிகாரிகளிடம் நியாயம் கேட்டபோது' 'எங்கள் ஜவான்கள் 7ஆம்வகுப்பு வரைதான் படித்தவர்கள் அவர்களது அறிவீனத்தால் இவ்வாறு நடந்துவிட்டது என்று காரணம் கூறினார்கள். இதெல்லாம் ஒரு காரணமா? இவ்வாறு நடந்த பிழைகளுக்காக 'கோட் மார்ஷல்' சட்டம் எல்லாம் இராணுவத்திலும் உண்டு.' இச்சட்டத்தின் கீழ் நீங்கள் எத்தனை பேரை ஈழத்தில் தண்டித்தீர்கள்?

வலிகாமம் பகுதியில் ஒரு அதிகாரி சண்டிலிப்பாய் என்ற இடத்தில் நடந்த புலிகளின் தாக்குதலில் தனது சகோதரனும், மைத்துனனும் இறந்துவிட்டார்கள் என்ற காரணத்துக்காக அந்தப் பகுதி மக்களை இரண்டு வருடம் கடும் சித்திரவதை செய்தானே? இதற்கு இந்திய இராணுவச் சட்டங்கள் அனுமதிக்கின்றதா?

திலீபன் இறந்த அன்றே வீட்டிலிருந்த காந்தியின் படத்தைக்கூட அகற்றி விட்டோம். 'சத்யமேவ ஜயதே' என்ற 'வாய்மையே வெல்லு' என்ற உங்கள் நாட்டின் தாரக மந்திரத்தையே மறந்து நீங்கள் காந்தியின் நாடு காந்தியின் மக்கள் என்ற சொல்லுக்கே அருகதை அற்றவர்கள். மறந்தும் எங்கள் பிரச்சினையில் நீங்கள் தலையிடாதீர்கள்.

**கா. வேழவேந்தன்**

யாழ்ப்பாணம்.

---

# புங்குடுதீவில் புதுவருட விளையாட்டு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மேற்கு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் தனது ஐந்தாவது ஆண்டு நிறைவையொட்டி ஏப்ரல் 13-ஆம், 14-ஆம் திகதிகளில் மாபெரும் விளையாட்டுப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

மரதன் ஓட்டம், சறுக்கு மரம் ஏறுதல், சங்கீதக் கதிரை போன்ற இளைஞர் யுவதிகளுக்கான பல்வேறு போட்டிகளும் சிறுவர் சிறுமியர்களுக்கான போட்டிகளும் இவ் விழாவில் நடைபெறுகின்றன.

புதுவருடதினத்தன்று நடைபெற இருக்கும் இவ் விளையாட்டுப் போட்டி புங்குடுதீவு பராசக்தி வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள வீரம் புளியடி மைதானத்தில் நடைபெறும். (22)

---

என்றால் நிரந்தர சமாதானம் வந்து விட்டது; மக்களுக்கு விடுதலை கிடைத்துவிட்டது என்று அர்த்தமா? இப்படி மக்கள் ஏமாறக் கூடாது. ஒரு போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. இச் சந்தர்ப்பத்திலே பேச்சுவார்த்தை நடத்தி அரசியலில் வெற்றி பெறுவதற்குத் தலைமைப்பீடம் முயற்சி செய்கிறது. இதை மக்கள் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்க வேண்டுமே தவிர ஓய்ந்து விடக் கூடாது' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தார் அந்த நண்பர்.

இன்னும் உமக்குச் சொல்ல வேண்டியது நிறைய இருக்கு. இப்பொழுது நேரமில்லை. இன்னொரு நேரம் வருகிறேன் என்று புறப்பட்டுப் போய்விட்டார் நண்பர்.

இனி எப்போ வருவாரோ அப்போ நானும் உங்களுக்குச் சொல்கிறேன்.

---

# உடலுக்கு கெடுதியான பிஸ்கட்கள் புதைக்கப்பட்டன

(ஈச்சமோட்டை)

பண்டத்தரிப்பில் உள்ள தனியார் பேக்கரி ஒன்றில் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் நிறங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பெருமளவு பிஸ்கட்டுகள் யாழ் உணவு மருந்துப் பரிசோதகர் திரு.ரி மகாதேவனால் கண்டுபிடிக்கப்பட்டு சுகாதார அதிகாரிகளினால் புதைக்கப்பட்டது.


இப் பகுதியில் உள்ள உணவுச் சாலைகள், பேக்கரிகள் ஆகியவற்றிற்கு நேரடியாக சென்று, பரிசோதித்த சுகாதாரக்குழுவினர் பண்டத்தரிப்புப் பகுதியில் மேற்படி பேக்கரியிலும் சோதனையிட்டனர்

கொழும்பிலுள்ள இரசாயன ஆய்வாளர் அலுவலகத்துக்கு இவை அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டு கிடைத்த அறிக்கையில் பின்னரே பிஸ்கட்டுகள் அனைத்தும் கிடங்கு வெட்டி புதைக்கப்பட்டன. (43)

ஈழநாதம்

## இன்று சங்காபிஷேகம்

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக் கிழமை காலை நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும்.




# புலிகள் பாதுகாப்புடன் வங்கியில் நிவாரணப்பணம் கொடுப்பனவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் தமிழீழ விடுதலைப் புலிகளின்பாதுகாப்பில்நேற்று வியாழக்கிழமை நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதுவரை ஸ்ரீ லங்கா பொலிசாரே வங்கி பாதுகாப்பு நடவடிக்கைகளில்ஈடுபட்டிருந்தனர் தற்போது பொலிஸ் நிலையம் மூடப்பட்டதையடுத்துவங்கிப் பாதுகாப்பு நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளே மேற்கொண்டுள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையம் மூடப்பட்டதையடுத்து இங்கு வைக்கப்பட்டிருந்த வங்கிகளின் பணங்கள் அவ்வவ் வங்கிகளால்எடுத்துச் செல்லப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. முன்னர் ஸ்ரீ லங்கா பொலிஸ் நிலையம் இயங்கிய பகுதிகளில் தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளே காணப்படுகின்றனர். (25)

## உன்னிச்சையில் தயக்கமின்றி விவசாயம் செய்யலாம்

(காத்தான்குடி)

''மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உன்னிச்சைப் பகுதியில் கடந்தகால வன்செயல்களால் பாதிக்கப்பட்டு அகதிகளான முஸ்லிம் மக்கள், அப்பகுதியிலுள்ள தமதுவயல்களில் எத்தகைய அச்சமுமின்றி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் இதனைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் மீண்டும் சகல புனரமைப்புகளுடனும், உத்தரவாதமான பாதுகாப்புடனும் விரைவில் அப்பகுதியில் நிரந்தரமாக மீளக் குடியமரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (55)

## பெரிய வெள்ளி நிகழ்ச்சி

(கிளிநொச்சி)

யேசுவின் சிலுவைப்பாதை நிகழ்ச்சி பெரியவெள்ளிக்கிழமையான இன்று கிருஷ்ணபுரம் ஜெப ஆலயத்தில் நடைபெறும்.

இன்று கர்லை திருநகரிலிருந்து மக்கள் நடைபவனியாக மேற்படி ஆலயத்திற்குச் செல்வர்.

இன்று மாலை வண. பிதா எஸ். ஜோன் ஆராதனை நடாத்துவார்.

யாழ். மாவட்டம்

## தமிழ்த்தினப் போட்டி இம்மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகள் இம்மாதம் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

17 ஆம் திகதி செவ்வாக்கிழமை எல்லாப் பிரிவுகளுக்குமான வாசிப்பு, எழுத்து, பேச்சு, விவாதம், சொல்வதெழுதல் நடைபெறும்.

18ஆம் திகதி புதன் கிழமை எல்லாப் பிரிவுகளுக்குமான பாஓதல், இசை, நடனம், நாடகம் என்பனவும் இடம்பெறும்.

18ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவிருந்த வடஇலங்கைச் சங்கீதசபைப் பரீட்சை இதனால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இத்தினத்தில் நடைபெறவிருந்த சங்கீதப்பரீட்சையில் பங்குகொள்வோர் தமது பரீட்சகர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தீவுப்பகுதிக்கு அரியாலை மணல்

(தீவுப்பகுதி)

அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் மணல் எடுப்பதற்கு தடைவிதித்துள்ள காரணத்தினால் தீவுப்பகுதியில் வீடுகள் மற்றும் ஏனைய கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான மணல்கள் தற்போது அரியாலைப் பகுதியில் இருந்தும், வடமராட்சிப் பகுதியிலிருந்தும் தீவுப்பகுதிக்கு லொறிகள் மூலம் ஏற்றிவரப்படுகின்றது.

மண்கும்பான், அல்லைப்பிட்டிப் பகுதியில் தொடர்ச்சியாக மணல் எடுக்கும் பட்சத்தில் இப்பகுதியில் நன்னீர் உவர்நீராக மாறக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டென ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்

### ஒரு தலைமையின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் போக்குவரத்து ஒழுங்குகளை விரிவு செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தலாம் என்றுரை தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட் அவர்கள் உட்பட பல அரசாங்க உத்தியோகத்தர்களும் பங்குபற்றி உரையாற்றினர். (லோ)

### வட-கிழக்கு..-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ்சின் பண்ணையில் கொள்ளை முயற்சி

(வியாங்கொடை)

பதினைந்து பேரைக் கொண்ட கொள்ளைக் கோஷ்டி ஒன்று வியாங்கொடையிலுள்ள முன்னாள் நிதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் பண்ணைக்குள் புகுந்து கொள்ளையடிக்க முயற்சித்தபோது பொலிஸாருக்கும், கொள்ளைக் கோஷ்டியினருக்குமிடையில் நடந்த துப்பாக்கிச் சண்டையில், கொள்ளைக்காரர் ஒருவர் கொல்லப்பட்டதோடு, மற்றவர்கள் காயப்பட்டதாக கம்பஹா பொலிஸ் அத்தியட்சகர் பி. டி. இ. கருணநாயக்க தெரிவித்தார்.

திங்கள் பிற்பகல் 3 30 மணியளவில் பண்ணைக்குள் அமைந்திருந்த பங்களாவிற்தள் நுழைந்த கொள்ளைக் கோஷ்டி, இரும்புப் பெட்டியைத் திறக்கும்படி பண்ணை முகாமையாளரைப் பயமுறுத்தியுள்ளனர். வாக்கி ரோக்கி தொடர்பு சாதனத்தைக் கையில் வைத்திருந்த பண்ணைப் பாதுகாப்பு அதிகாரி, வியாங்கொடைப் பொலிசுக்கும், வியாங்கொடையில் முகாமிட்டிருந்த இராணுவத்தினருக்கும் அறிவித்துள்ளார்.

ஸ்தலத்துக்கு விரைந்த இராணுவ, பொலிஸ் படையினர்மீது கொள்ளைக்கோஷ்டியினர் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். பொலிஸ் திருப்பிச் சுட்டதில் ஒருவர் மரணமடைந்தார். பலர் காயமுற்றனர்.

பொலிஸார் மூன்று பேரை மடக்கிப் பிடித்தனர். மற்றவர்கள் காயத்துடன் தப்பியோடி விட்டார்களாம்.

இரும்புப் பெட்டியில் ஒரு இலட்சம் ரூபா பணமிருந்ததாகவும், அப்பணம் தொழிலாளருக்கு சம்பளம் வழங்குவதற்காக கொண்டுவரப்பட்ட பணமென்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸார் கைத்துப்பாக்கி ஒன்றையும் கள்ளக் கோஷ்டியிடமிருந்து மீட்டுள்ளனர். இத்துப்பாக்கி சென்ற ஆண்டு ஜே. வி. பியினரால் கடத்திச் செல்லப்பட்டு, பின்பு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் வியாங்கொடையில் இறந்து கிடக்கக் காணப்பட்ட ஐக்கிய சோஷலிஸ்ட் முன்னணி மாகாணசபை உறுப்பினருடையதாக இருக்கலாம் எனப் பொலிஸார் நம்புகின்றனர்.

கொள்ளைக் கோஷ்டி துப்பாக்கி வெடிகுண்டு, கைத்துப்பாக்கி, கிறிஸ்கத்தி ஆகிய ஆயுதங்களை உபயோகித்ததாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வியாங்கொடைப் பொலிஸார் புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்,

### இந்தியா...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

னுடன் ஓர் போருக்கு இந்திய மக்கள் மன அளவில் ஆயத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததில் இருந்து நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

அதேவேளை அமெரிக்கா இரு நாடுகளும் நெருக்கடிகளைத் தவிர்த்து பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளுமாறு கேட்டுள்ளது. ஆனால் இந்தியா அமெரிக்காவில் இருந்து கொண்டு இந்தியாவிற்கு எதிராக இயங்கிக்கொண்டும் அறிக்கை விட்டுக் கொண்டு இருக்கும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# கிராமப்புற பாடசாலைகள் புறக்கணிக்கப்படுகின்றன

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு கிராமப்புறப்

களை வெளியில் இருக்க வைத்து படிப்பிக்கும் நிலை

# யாழ். மாவட்ட விஞ்ஞானக்கல்வி வெகுவாகப்பாதிக்கப்பட்டுள்ளது

- சற்குணராஜா

(யாழ்ப்பாணம்)

பயிற்சிக் களங்களை அமைப்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு கிராமப்புறப் பாடசாலைகளும் மிகவும் புறக்கணிக்கப்பட்டே காணப்படுகின்றன.

ஒவ்வொரு பாடசாலையிலும் கல்வி பயிலும் மாணவர்கள் தொகைக்கு அரைவாசிக்கும் குறைவாகவே கதிரை, மேசைகள் காணப்படுகின்றன. இதனால் ஏனைய மாணவர்கள் நிலத்தில் இருக்கவேண்டி உள்ளது.

மற்றும் கட்டிட வசதியும் குறைவாகவே காணப்படுகிறது. இதனால் மாணவர்களை வெளியில் இருக்க வைத்து படிப்பிக்கும் நிலையில் உள்ளோம்.

இவ்வாறு பல பாடசாலை அதிபர்கள் ஈழநாதம் நிருபரிடம் தெரிவித்தனர். எனவே இலவச பாடப் புத்தகங்கள், இலவச மதிய உணவு போன்ற திட்டங்களை நடைமுறைப் படுத்தி வரும் அரசு இவ்வாறு பின்தங்கிய பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

(39)

---

# இ. போ. ச. பஸ் மோதியதால் தாயும் மகனும் மரணம்

(அட்டாளைச் சேனை)

அம்பாறை இ.போ.ச. யின் பஸ் ஒன்று இங்கினியா கலைக்குச் சென்ற போது அவ்வழியே துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்த தாயும் மகனும் இந்தப் பஸ்ஸினால் மோதுண்டு இறந்தனர். இவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த கணவனைப் பார்த்து விட்டு வீடு திரும்பும் போது இது நடைபெற்றது.

தனியார் வான் ஒன்று பொத்துவிலில் இருந்து அக்கரைப்பற்று வரும் வழியில் கோமாரி என்னுமிடத்தில் பாதையைவிட்டுவிலகி, குடைசாய்ந்ததினால் ஐந்து பிரயாணிகள் கடும் காயத்துக்குள்ளானார்கள்.

(46)

---

## 1981-இல் லயன்ஸ் கழகம் கட்டிய

# கல்முனை சிறுவர் பூங்கா கவனிப்பாரற்று உள்ளது

(அம்பாறை)

கல்முனை பொது நூலகவளவில் அமைந்துள்ள லயன்ஸ் கழகத்தினால் 1981-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் பூங்கா இன்று கவனிப்பாரற்ற நிலையில் கிடக்கின்றது.

பூங்காவில் பொருத்தப்பட்ட விளையாட்டுச் சாதனங்கள் கறைபடிந்தும், பூங்கா புல் பூண்டுகள் நிறைந்தும் காணப்படுகின்றது. இவைகளைத் திருத்தி சிறுவர்களுக்கு மீண்டும் உகந்த இடமாக ஆக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் அமைப்பாளர் ஜனாப் முகம்மது யூசுப் அதிகாரிகளைக் கோருகின்றார்.

(48)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது

---

தியக் கூறுகள் உண்டென ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மணல் ஏற்றுவதற்கான தடையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்திருந்தனர்.

(15)

---

### ஈ. பி. ஆர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நிபந்தனையற்ற முறையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் சிநேகபூர்வமாக சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்று வருவதாகவும் ஆரம்பக்கட்டத்தில் சர்ச்சைகள், சங்கடங்கள் யாவும் நீக்கப்பட்டு விட்டதாகவும் அமைச்சர் ரஞ்சன் மேலும் தெரிவித்தார்.

ஈ. பி. ஆர். எல். எவ் உடன் அரசு பேச்சு நடத்துமா என்ற ஒரு கேள்விக்கு அமைச்சர் ரஞ்சன் பதிலளிக்கையில் எவருடனும் மோதலைத் தடுத்து நிபந்தனையற்ற பேச்சு மூலம் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதே அரசின் கொள்கை யென்றும் ஆனால் அது பேச்சுக்கு நிபந்தனை விதிக்கிறதென்றும் சொன்னார்.

---

### அரச ஊழியருக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்கு திரட்டிய சம்பளமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

60 வீதத்துக்கு மேல் சம்பளத்தில் கழிவுகள் ஏற்படக் கூடாது எனபதும் இளைப்பாறும் வயதெல்லையும் முற்பணம் வழங்கும்போது கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும்.

இதேவேளை, அரசாங்க உத்தியோகத்தர் கார், சயிக்கிள் மோட்டார் சயிக்கிள் ஆகியன வாங்குவதற்கு வழங்கப்பட்டுவந்த முற்பணத்தின் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

---

### வட-கிழக்கு..-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் பற்றி நேரடியாக யாழ். அதிகாரிகளை சந்தித்து ஆலோசனைகள் செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைத்து கல்வி கலாசார ஒருங்கிணைப்பு திட்டங்களை ஏற்படுத்துவதும் அதற்காக பிரத்தியேக குழுக்களை நியமிப்பது பற்றியும் ஆலோசித்துள்ளதாகவும்அவர் தெரிவித்தார்.

(லோ)

---

### இம்மாத...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரத்து அமைச்சர் அபுயூசுப் ஐலன்ட் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

வழமைபோல் திருக்கோணமலையில், மாகாண சபைச் செயலகத்தில் சபைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக இன்று (வெள்ளி) தான் திருக்கோணமலை போகவிருப்பதாக அபு யூசுப் தெரிவித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் திருக்கோணமலை நகரத்தில் ஈ. பி. ஆர். எல்ஆல் கூட்டத்தைக் கூட்டுவது நடைமுறைச் சாத்தியமா என்ற கேள்விக்கு அபு யூசுப் பதிலளிக்கையில் வடக்கு-கிழக்கு மாகாணசபை மக்களால் தெரிவு செய்யப்பட்டதென்றும், தங்கு தடையின்றிக் கூட்டம் ஒழுங்காக நடைபெறுவதற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினரில் ஒரு பகுதியினர் மாகாணசபைக் கூட்டத்தை வழமையான இடமான திருக்கோணமலையில் நடாத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு அமைய கூட்டத்தை கொழும்பில் நடத்த வேண்டும் என்ற முடிவை மாற்றியுள்ளார்களாம்.

---

இயங்கிக்கொண்டும் அறிக்கை விட்டுக் கொண்டு இருக்கும் காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் அமால்துல் கானைநாடுகடத்துமாறும்இந்தியா அமெரிக்க அரசையும், ஐக்கிய நாடுகள் சபையையும் கோரியுள்ளது.

---

### முதல் தடவையாக..

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியற் பொறுப்பாளர் டொமினிக் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இலங்கையில் ஆட்சிபீடத்திலுள்ள ஒரு அரசாங்கத்தின் அமைச்சரை தலைவர் பிரபாகரன் சந்திப்பது இதுவேமுதல் தடவையாகும்.

வடக்கு கிழக்கு மாகாண மக்களின் பாதுகாப்பு இப்பேச்சுக்களில் முக்கிய இடம் பெறுமா என்றுஎதிர்பார்க்கப் படுகிறது. அதிலும் குறிப்பாக வட - கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றும் சிங்களபொலிசாரின் நடவடிக்கைபற்றி கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்படலாம் எனத் தெரிகின்றது.

மேலும் நேற்று முன்தினம் பருத்தித்துறை, திருமலை ஆகிய இடங்களில் பொலிசார் நடந்து கொண்ட முறைகள் பற்றி பிரஸ்தாபிக்கப்படலாம் என அறிய வருகிறது.

மேலும் வடமராட்சி மக்கள் தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா இராணுவம், பொலிஸ் என்பனவற்றாலும்,இந்தியஇராணுவத்தினாலும் மிகவும் பாதிக்கப் பட்டவர்கள் என்பதால் தொடர்ந்தும் அவர்கள்பாதிக்கப் படுவதை விடுதலைப் புலிகள் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டார்கள் என்ற ரீதியில் கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்படலாம் என அறிய முடிகின்றது.

---

### வீட்டுப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை வெளிநாடுகளில் வீட்டுப்பணிப்பெண்களாக பணிபுரிவோருக்கு பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளது.

---

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விஞ்ஞான கல்வி கடந்தகாலங்களில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. தொண்டமானாறு விஞ்ஞான கல்வி வெளிக்கள நிலையங்கள் மாறிமாறி ஒவ்வொரு நாட்டு இராணுவங்களாலும் முகாம்களாக பாவிக்கப்பட்டமையே என வடக்கு கிழக்கு மாகாணசபை கல்வி கலாசார விளையாட்டுத் துறை செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராஜா தெரிவிக்கிறார்.

நேற்று முன் தினம் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்த அவ்வதிகாரி தொண்டமனாறு விஞ்ஞான கல்வி வெளிக்கள நிலையத்தை புனரமைப்பது சம்பந்தமாக அந் நிலையத்திற்கு விஜயம்செய்து மேற்பார்வை செய்துள்ளார்.

அந் நிலையம் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் வட மாகாண விஞ்ஞான கல்வியை மேலும் வளர்ப்பதற்கு ஏதுவாக விஞ்ஞான ஆசிரியர் பயிற்சிக் களங்களை அமைப்பதற்கும், செய்முறை பரீட்சைகளை மாணவர்களுக்கு வைப்பதற்கும் இந்நிலையத்தைபுனரமைப்பதன் மூலம் வழிவகை செய்யப்படும்.

இந்திய இலங்கை ராணுவங்களால் சேதமாக்கப்பட்ட இக் கட்டடத்தை புனரமைப்புச் செய்ய ஏழுலட்ச ரூபா தேவை எனவும் அவர் தெரிவித்தார். ஜூன் மாத இறுதிக்குள் இக் கட்டடம் புனரமைக்கப்பட்டு விடும் எனவும் அவர் கூறினார்.

(லோ)

---

### மினிபஸ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீது மோதியதால் அப்பெண் ஸ்தலத்திலேயே மரணமானார். பெண்ணின் முகம் சிதறப்பட்டநிலையில் காணப்பட்டது. மரணவிசாரணையின்போது, மரணமானவர் சின்னம்மா கனகராசா (வயது 47) என்று அடையாளம் காணப்பட்டது.

(லோ)

---

### புத்தாண்டில்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வாளர்கள் அனைவருக்கும் சேவையாற்றவுள்ளது.

இத்தினத்தன்று அதிகரித்த வட்டி வீதத்தில் சேமிப்புச் சான்றிதழ்களை கொள்வனவு செய்பவர்களுக்கு சிற்றுண்டி வகைகளும், கைவிசேஷமாக புதிய நாணயங்களும் வழங்கப்படுமாம்.

---

- சற்குணராஜா

---

### உல்லாசப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதினைந்து இலட்சம் ரூபா பெறுமதியான டொலர்நோட்டுக்கள், கமராக்கள் உட்பட பல பொருட்கள் கொள்ளையிடப்பட்டதோடு, அவர்களின் கடவுச் சீட்டுகளும் பறித்தெடுக்கப்பட்டுள்ளன.

இக் கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள் ஏறத்தாழ 10 பேர் அடங்கிய கோஷ்டியினராவர். இவர்களில் சிலர் இராணுவச் சீருடையிலும், சிலர் சாரமும், சிலர் காற்சட்டைகளும் அணிந்திருந்ததாகவும் தெரியவருகின்றது.

---

### சப். இன்ஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக கருத்துத் தெரிவித்த யாழ். பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் ஒரு சில பொலிசாரே இப்பிரச்சினைக்கு காரணமாக இருப்பினும் அப்பிரிவைச் சேர்ந்த சப். இன்ஸ்பெக்டர் உட்பட மாற்றப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.